1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams:
"CATHOLIC PRESS"
JAFFNA.

Telephone:
NO. 100

# சத்தியவேத பாதுகாவலன்

" கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம் "

76-ம் புத்தகம் 29-ம் இல: யாழ்ப்பாணம் 1951-ம்ஆண்டு ஆடி மாதம் 26-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10

## குருவானவர்

**அவர்** மற்றோர் கிறீஸ்துநாதராய் இருக்கிறார்—
அவரைக் கனம்பண்ணுவாயாக!

**அவர்** சருவேசுரனின் பிரதிநிதியாய் இருக்கிறார்—
அவரை நம்பிநடப்பாயாக!

**அவர்** உனது பரோபகாரியாய் இருக்கிறார்—
அவரை நேசித்து அவருக்கு நன்றி பாராட்டுவாயாக!

பலிபீடத்திலே

**அவர்** உனது 'செபத்தைச் சருவேசுரனுக்கு ஒப்புக்கொடுக்கிறார்—
அவரை இடையிடையேநினைவுகூர மறந்து போகாதே!

**அவர்** உனக்காகவும், உத்தரிக்கிற ஸ்தலத்திலுள்ள உன்னுடையவர்களுக்காகவும் மன்றாடுகிறார்—
அவரை நன்குமதித்துத் தேவ கிருபையை அவர் மேல் இரந்துகொள்ள மறந்து போகாதே

**பாவசங்கீர்த்தனத்தொட்டியிலே**

**அவர்** உனது ஆத்தும வைத்தியராயிருக்கிறார்—
அதனால் உனது ஆத்துமத்திலுள்ள காயங்களை அவருக்குக் காண்பிப்பாயாக!

**அவர்** தேவனின் பக்கமாக உன்னைவழிநடத்துகிறார்—
அவருடைய சாந்தமான உபதேசங்களின்படி ஒழுகுவாயாக!

**அவர்** உனக்கு நீதிதீர்க்கிறார்—
அவருடைய தீர்ப்புகளைத் தட்டாது பணிவுடன் ஏற்றுக்கொள்வாயாக!

நாளாந்த சீவியத்திலே

**அவர்** உன்னைப்போலவே மனுஷத்தன்மை உடையவர்—
அவரை எழுந்தமானமாய்க் குற்றவாளியாக்கிக்கண்டனஞ் செய்யாதே!

**அவர்** உன்னைப்போலவே மனுஷத்தன்மை உடையவர்—
அவரை உனது பட்சம்நிறைந்த ஒரு வார்த்தை மகிழ்ச்சியடையச் செய்யும் என்பதை மறவாதே!

**அவர்** செய்யும்குறைகுற்றங்களைச் சொல்ல வேண்டுமானால்—
தேவனுக்கே அவைகளைச் சொல். அப்போது அவைகளை திருத்திக் கொள்வதற்கான ஞானஒளியையும், ஞானப் பலத்தையும் தேவன் அவருக்குத் தந்தருளுவார்.

**அவர்** பெரிய உத்தரவாதத்தைக் கொண்டிருக்கிறார்—
குருத்துவசீவியத்திலே அவருக்குவழிகாட்டும்படியும், மரணவேளையிலே அவர் மட்டில் இரக்கங் காட்டும்படியும் தேவனை இரந்துகொள்.

குருவானவர் யார்? தேவகட்டளைகளை மானிடருக்குப் பிரசங்கித்து மோட்சவழியில் நம்மை நடத்துபவர். சகல சாஸ்திரங்களிலும் உத்தமமும் சிறந்ததுமான ஆத்துமஇரட்சணிய சாஸ்திரத்தை நமக்குப் படிப்பிக்கிற உத்தம உபாத்தியாயராவர்.

குருவானவர் யார்? நமது ஆண்டவரான யேசுக்கிறீஸ்துநாதர் தமது பாடுகளின் கனியாகிற தேவதிரவிய அனுமானத்தைச் சுமுத்திரையாக நிறைவேற்றி நமக்குத் தருகிறவராம். சகலரும் பாவக் கட்டுகளினின்று விடுதலை பெற்று அர்ச்சியசிஷ்டர்களாகும்படியான தேவ இஷ்டப்பிரசாதத்தை நமக்குப் பரவச்செய்யும் வாய்க்காலாயிருக்கிறார்.

குருவானவர் யார்? நமக்கு ஞானஸ்நானங் கொடுத்தவர் அவர். பாவமன்னிப்பைத் தயவோடு தந்தவர், தருபவர் அவர். பரலோகமன்னாவென்னும் சற்பிரசாத போசனத்தை நமக்குச் சித்தஞ்செய்து கொடுப்பவர் அவர். நமது மரணவேளையிலும் நமக்குச் செய்யவேண்டிய ஞான உபகாரங்களையெல்லாம் நிறைவேற்றி நாம்சமாதானமாக இச்சீவியத்தைக் கடந்துபோக உதவிசெய்யும் பரம உபகாரி அவர்.

குருவானவர் யார்? மனிதர் தினமும் நன்றிகெட்டவர்களாய்த் தேவனுக்குத் துரோகஞ்செய்யத் தலைப்பட்டிருப்பதால் தேவநீதியின் கோபத்தைத் தணிக்கத் தினமும் நமது தேவாலய பீடத்திலே விலைமதிக்கப்படாத திருப்பலியாகிற யேசுநாதரைப் பரம பிதாவுக்கு ஒப்புக்கொடுத்து வருகிறவர்.

ஒருகுருவானவர் எவ்வளவுதான் அற்பமானவராய் இருந்தாலும் திராணியில்லாதவராய் இருந்தாலும் நீ அவரிடத்தில் பாவசங்கீர்த்தனஞ் செய்தவுடன் "மகனே! நீசமாதானமாய்ப்போ. உன்னை மன்னித்தோம்" என்று சொல்ல அதிகாரமுடையவராயிருக்கிறார்.

குருவானவர் யார்? மோட்ச பாக்கியத்தைத் திறந்துகொடுக்க அவரிடந்தான் ஆண்டவர் திறவுகோல் கொடுத்திருக்கிறார். அதனால் அவரைத்தம்முடைய ஸ்தானபதியாக நியமித்து நம்மை மன்னித்தோம் என்று சொல்ல அதிகாரமுடையவராய் இருக்கின்றார்.

## "தோல்வியடைந்த..."

சென்றவருடம் ருஷியாவைப் பற்றிக் கவர்ச்சிகரமான ஓர் புஸ்தகம் வெளிவரலாயிற்று. "தோல்விஅடைந்த கடவுள்" (The God That Failed) என்பதே அதன் நாமம். கம்யூனிஸத்திற்காக ஆர்வத்தோடும், உற்சாகத்தோடும் தொண்டாற்றிவந்து, கடைசியாக அதனைத் திரஸ்கரித்து, ருஷியாவிலிருந்து உயிர்தப்பிய ஆறுபேர்சேர்ந்து எழுதியதே அதுவாகும். 51 வயதுள்ள இத்தாலியன் இஞாசியோ சிலோனெயும் (Ignazio Silone), 43 வயதுள்ள நீகிரோவன் றிச்சாட்றைற்றும் (Richard Wright), அதேபிராயமுள்ள ஆங்கிலேயன் ஸ்ரீவன் ஸ்பென்டரும் (Stephen Spender), 46 வயதுள்ள ஹங்கேரியன் ஆர்தர் கொஸ்த்லெரும் (Aurther Koestler), 82வயதுள்ள பிரான்சியன் அந்திரே ஜீதும் (Andre Gide), 55 வயதுள்ள அமெரிக்கன் லூயிஸ் பிஷருமே (Louis Fisher) அவர்கள், லூயிஸ் பிஷர்மட்டும் கம்யூனிஸ்த கட்சியில்சேராவிடினும், அதன்வெற்றிக்காக ஏராளமான பிரசுரங்களை வெளியிட்டவன். இறுதியிலேஇவர்கள் கம்யூனிஸத்தை விட்டு விலகிவிட்டார்கள். பிராயத்திலும், தேச ஆசாரங்களிலும் வேறுபாடுடைய இவர்கள் கம்யூனிஸத்தைப்பற்றி ஒரே முடிவுக்குவந்து தத்தம்வரலாறுகளைக் கூறுவதாகிய இந்தப்புத்தகம் யாவரினதும் சிந்தனைக்குரியதேயாகும்.

இன்றைய பொருளாதார துறையிலுள்ள ஏற்றத்தாழ்வுகளே இவர்களைக் கம்யூனிஸத்தின்மீது அபிமானங்கொள்ளச் செய்தன. ஏழைகள்படும்பாடுகளும், தனவந்தர்கள் சுகிக்குஞ் சுகங்களும்சமூகநீதியின்மையைக் கர்ணகடூரமாக எடுத்துக்காட்டின. அதேசமயத்திலே ருஷியாவிலோவெனில், சமத்துவ சுதந்தரமானஓர்சமூகநீதிமுறை நிலவுகிறதென்றும், அவ்விடத்தில்எல்லாரும்—தொழிலாளி முதலாளியென்றபேதமின்றி—ஒருபூலோகமோட்சத்தில் வாழ்கின்றார்களென்றும் கேள்வியுற்று மகிழ்ந்தார்கள். ஆதலால், அவர்கள் கம்யூனிஸத்தை ஆதரித்து, அதன்வெற்றிக்காக அயராதுழைக்கத் தலைப்பட்டார்கள்.

கம்யூனிஸ்தொண்டர்களின் ஆவேசமும், உற்சாகமும் அவர்களுக்கு ஓர்புத்துயிரைத் தந்தன. ஆனால், இது வெகுநாள் நீடிக்கவில்லை. ஆறுபேரின் அனுபவமும் ஏறக்குறைய ஒன்றாகத்தானிருந்தது. கட்சிக்கு எல்லாத்துறைகளிலும் சேவை புரியவேண்டுமென்பது கண்டிப்பானசட்டம். அதுதான் அவர்களதுவிருப்பமும். ஆனால், கட்சியின் செய்கைகளைக்கண்டித்துப் பேசுவது கூடாது. இதை அவர்களால் சகிக்கமுடியவில்லை. கம்யூனிஸ்தகொள்கைகளிலும், நடவடிக்கைகளிலும் குறைகூறினால் "பிற்போக்கானவன், முதலாளித்துவத்தை ஆதரிப்பவன்" என்றபட்டந்தான் கிடைத்தது. றிச்சாட் றைட் கேட்டகேள்விகளுக்கு எப்பொழுதும்கிடைத்த பதில் என்ன? 'சகாவே, உனக்குக் கம்யூனிஸ்தகொள்கைகள் இன்னும்தெரியாது' என்பதேயாம். இத்தகையநிலைமை அவர்களுக்கு வருத்தமுண்டு பண்ணியது.

கட்சியின் அங்கத்தினர்களுக்குள்ளே யதார்த்தமான நட்புறவோ, விசுவாசமோ எள்ளளவேனும் கிடையாது. இதைப் பற்றிக்கொஸ்த்லெர்சொல்வதாவது: "உனதுசகாவை நீ நேசிக்கலாம். ஆனால், உன்னுடையவும், அவனுடையவும் நலனுக்காக அவனைஒருக்காலும் விசுவசிக்கக்கூடாது. உனது நலனென்றுசொன்னது, அவன் உன்னைக் காட்டிக்கொடுக்கும் நிலைமை ஏற்படுகிறதினாலும் அவனுடைய நலனென்று சொன்னது, காட்டிக்கொடுக்கத்

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்

### 114 வயசுப் பாட்டனர்

கலிபோணியாவிலே, எல்செறிற்றோஎனுமிடத்து அர்ச். அருளப்பர்கோவில் விசாரணைப்பங்கைச் சேர்ந்தவரான திரு. ஜஃய்றினே ஒட்ரீஸ்எனும் விருத்தாப்பியகத்தோலிக்கர் சமீபத்திலே தனது 114-வது பிறந்தபெருநாளைக் கொண்டாடினர். இவர் அத்துணைவயோதிகராயிருந்தபோதிலும் தமது புதல்வியுடனும், பேரப்பையனுடனும் தினமுங்காலையிலே கோவில்சென்று திவ்வியபூசைகண்டுவருகிருர். கத்தோலிக்கபுத்தகங்கள், பத்திரிகைகளைவாசிப்பதிலும், நாள்தோறும்பொழுதுபோக்குக்காக அயலகத்தைச்சுற்றி நடந்து உலாவுவதிலும் தனது நேரத்தைக் கழித்துவருகின்ருர்.

### அமெரிக்க பிரபலகருதினல்

பிலடெல்பியாநகரின் அதிமேற்றிராணியாராய் விளங்கியிருந்தவரான கருதினல் டெனிஸ் டகேட்ரி ஆண்டவரின் மரணத்தாலே அமெரிக்க ஐக்கியதேசம தனது பேரான கருதினல் ஒருவரை இழந்துவிட்டது. மரிக்கும்போது இவருக்கு வயது 86. 1921-ம் ஆண்டு ஓர் கருதினல் ஆக்கப்பெற்ற இவர் என்றைககும் ஓர் பிரயாணியாக அறியப்பட்டுவந்தார். சென்றவருடம் இவர் மெக்சிக்கோவைத் தரிசித்தார். ரோமாபுரிக்குப் பரிசுத்தவருடயாத்திரை செய்தார். மிகநீணடதும், ஊக்கமிருந்ததுமான தமது சீவியகாலத்திலே இவர் நான்குமுறை உலகத்தைசசுற்றிப் பிரயாணஞ் செய்திருக்கின்ருர். 1937-ம ஆண்டு பிலிப்பைன்ஸ் நாட்டு மனிலா பட்டணத்தில் நடந்தேறிய சர்வதேச சற்பிரசாதமகாநாட்டுக்கு இவரே பாப்பரசரின் பிரதிநிதியாகச் சென்று அதற்குத தலைமைவகித்தார். பிலடெல்பியாநகர் உதவிமேற்றிராணியாரான மொஞ். கரோல் மைக்கோர்மிக் ஆண்டவர் இவரின்மருகராவர். 1921-ம் ஆண்டிலே 15-ம் ஆசீர்வாதப்பபாப்பானவராலே இவருடன் கருதினல்மார் ஆக்கப்பெற்றவர்களில்இருவர்மாத்திரமேஇன்னமும் சீவந்தராயிருக்கின்றனர்.

### மனந்திரும்பிய அரசியற்தலைவர்

பிறேசில்நாட்டிலே அநேக வருடகாலம் ஓர் அரசியற்தலைவராய் இருந்துவந்த டக்றர் போர்ஜெஸ் டேமடெருஸ் அவர்கள் 86-ம்வயசிலே மனந்திரும்பிக் கத்தோலிக்க திருமறையைத்தழுவிச் சமீபத்திலே தமது பாரியாரோடும், இனசனரோடும் திவ்வியநன்மை பெற்றுக் கொளளலாயினர். அன்று அவரது திருமண 62-வதுவருடநிறைவு தினமுமாகும். அங்கே 25 வருடகாலம் இவர் றையோகிருன்டி டேசல் மாகாண தேசாதிபதியாய் இருந்தவர். விஞ்ஞானமே பரமசத்தியம என்ற கொள்கையைப் பலமாக ஆதரித்துவந்தவர். பேரான கலவிமானும், சரிதாசிரியருமான வண. லூயிஸ் ஜேகர் சுவாமியாரே இவரை மனந்திருப்பினர்.

### 310 பேரின் உறுதிவாக்கு

பிரான்சிய புதிய பாராளுமன்ற அங்கத்தவர்களில் 310 பேர் அங்கு கத்தோலிக்க சமயஸ்தாபன பாடசாலைகளுக்குஅரசாங்கம பணஆதரவு அளிக்கும் விஷயமாய் அதிகஉதாரமான கொள்கை காண்பிப்பதாக உறுதிவாக்கு அருளியிருக்கின்றனர். இவர்கள் தெகோலின் கட்சியையும், எம். ஆர். பி. எனப்படும் கத்தோலிக்க கட்சியையும் சேர்ந்தவர்களும், வலதுசாரிச் சுயேச்சை அங்கத்தவர்களுமாவர். சமயஸ்தாபன பாடசாலைகளுக்கு அரசாங்கம் உதவி செய்வதை என்றைக்குமே எதிர்த்துநிற்கின்ற சோஷலிஸ்த-கம்யூனிஸ்த அங்கத்தவர்களாய் இப்போது பிராஞ்சிய பாராளுமன்றத்தில் 205 பேரே இருந்து வருகின்றனர். இவர்கள் தொகை சென்றபொதுத் தேர்தலின்போது 80 பேரால் விழுந்துபோயிற்று.

### கம்யூனிஸ்தரின் கபடநாடகம்

சமீபத்தில் நடந்தேறிய இத்தாலிய நகரசங்க தேர்தல்களிலே அதிகமான சனசம்மத வாக்குகளைப் பெற்றுக்கொள்ளுமாறு எடுத்துக்கொண்ட முழுமுயற்சியிலே கம்யூனிஸ்தர்கள் பலமுறைகளிலும் கபடமாகத் தங்கள் சின்னமாகிய அரிவாளையும், சுத்தியலையும், அகற்றிவிட்டு, அவற்றிற்குப்பதில் அர்ச்சியசிஷ்டர்களின் பிரதிமைகளை உபயோகித்திருக்கிருர்கள். அர்ச். ஜோண்பொஸ்கோவின் பிறந்தவிடமாகிய காஸ்தெல் நுவோவிலே அவரின்படத்தையும், மற்றுமிடங்களிலே ஆசனகோவில் மணிக்கோபுர சின்னங்களையும் உபயோகித்தார்கள். என்னதந்திரம்செய்தும் அநேக சம்மத வாக்குகளை அவர்கள் பெற்றுக்கொள்ளமுடியவில்லை. தூறின், புளோறென்ஸ் முதலாம் பெரிய நகர்களும், மற்றும் அநேக சிறுபட்டினங்களும் அவர்களின் ஆதிக்கத்திலிருந்து பறிமுதலாயின.

### சமாதான மாளிகை

யுத்தம் நடந்தகாலத்திலே பரிசுத்தபாப்பரசர் யாதாமோர் அபாயமுமின்றிக் காப்பாற்றப்பட்டமைக்கு நன்றியறிதலாக உலகின் அநேகபகுதிகளிலுள்ள கத்தோலிக்க சேவாசங்க யுவர்களின் பணஉதவியைப்பெற்றுக் கட்டப்பெற்ற "சமாதான மாளிகை" யானது ரோமாபுரியின் நவமானபெரிய சர்வதேச யுவர்களின் நிலையமாய் விளங்குகின்றது. சமீபத்திலே இது கருதினல் பியாசா ஆண்டவரால் திறந்துவைக்கவும், பாப்பரசரின் விக்கார் ஜெனறலான கருதினல் மிக்காரு ஆண்டவரால் ஆசீர்வதிக்கவும்படலாயிற்று. இது மகாநாடுகள் கூடுவதற்கும், கல்விபயில்வதற்கும், ஞானப்பியாசங்கள் செய்வதற்குமான மண்டபங்களை அடக்கியதாய்த் 900 பேர் தங்குவதற்குப்போதிய இடவசதிகளைக் கொண்டுள்ளது.

Mal. No. 486. Eng.

### நோய் பரப்புகிறவைகள்

நாம் உயிர்வாழும் பூமியின் அயனந்தபகுதிகள் கிருமிகளால கொண்டுசென்று பரப்பப்படும் அநேக நோய்களுக்குச் சார்புள்ளனவாய் இருக்கின்றன. அத்தகைய நோய்களைத் தடுத்துக்காவல்பண்ணச் சிறந்தவழிவகையாதெனில், அவைகளைக் கொண்டுசென்று பரப்புகிறவைகளை எதிர்த்துப் போர்தொடுப்பதேயாகும். இதுவிஷயமாய், ஒவ்வோர் நோயையும் கொண்டுசென்றுபரப்பும் கிருமியை அறிந்துகொள்வது இயற்கையில் அவசியமாகும்.

சிலகிருமிகள் தொற்றுநோய்க்குரிய வஸ்துவை நேர்முகமாகக் கொண்டுசெல்ல, மற்றவைகளோ மறைமுகமாகக் கொண்டுசெல்கின்றன. உதாரணமாக, சாதாரண வீட்டு ஈ தனது கால்களின் மயிர்களுக்கிடையே தொற்றுநோய் வஸ்துவைக் கொண்டுசெல்லுகிறது. இந்தவிதமாக அது நேர்முகமான ஓர்மாதிரியிலேகொள்ளைநோயைப் பரபபிவிடுகிறது. இன்னும் தொற்றுநோய்பற்றிய வஸ்துவைக் கிருமிகள் கொணடுசெல்வதாலே வைசூரியையும், விஷபேதியையும் பரப்பிவிட முடியும்.

மறுபுறத்திலே மற்றக் கிருமிகள் ஒட்டுணிகளுக்கும், தொற்றுநோயைப் பரப்பும் வஸ்துக்களுக்கும் தாதாக்களாயிருந்துதங்களுடையவேலையை அதிகம சிக்கான ஓர் முறையிலே செய்துமுடிக்கின்றன. உதாரணமாக, இந்தப்பகுதியில் புழுக்கள், பேன்கள், கரிய ஈக்கள், மலேரியாவைக் கொண்டுசென்று பரப்பும் நுளம்புகள் ஆகியன சேர்ந்துள்ளன. இவற்றிலே தொற்றுநோயைப் பரப்பும் அங்க அமைப்புடைய அநேகமானவற்றின் வாழ்க்கைச் சரிதையானது வெளிப்படுத்தவல்ல ஓர் சரிதைக்குப் பலமுறைகளிலும் ஒப்பிடக்கூடியதாய் அத்துணைவிநோதமாயிருக்கின்றது. அதிகம்நன்ருக விரிவடைந்துள்ளதாய் அறியப்பட்டுள்ள சம்பவம் யாதெனில், மலேரியாத் தூக்குணியைக் கொண்டுசெல்வது, அனோப்பிலெஸ் எனும் ஆண் நுளம்புதான் என்பதே.

அயனந்த நாடுகளிலே மலேரியா பெரும் அளவாகப் பரக்கின்றது. லட்சக்கணக்கான மக்களுக்குச் சொல்லமுடியாத உபத்திரவத்தை உண்டுபண்ணுவதுதவிர, மிகப்பெரிய பணநஷ்டங்களையும் உண்டுபண்ணுகின்றது. இந்தப் பயங்கரநோயை எதிர்த்துத் தடுப்பதிலே நல்லதிர்ஷ்டவசமாய்க் குயினைனில் உலகம் ஓர் உத்தமும், சித்திகரமுமான மருந்தைக் கொண்டிருக்கின்றது.

முந்திய சர்வதேச சங்கத்தாலே நியமிக்கப்பட்ட மலேரியா நிபுணர்களின் கம்மிற்றியானது 1938-ம் ஆண்டு விடுத்த தனதுஅறிக்கையிலே மலேரியாக் காலமுழுவதும் அதுவராமல்தடுக்குமாறு தினமும் 6 கிறேய்ன் குயினைனும், ஓர்கால் மலேரியாச் சுரங்கள் கண்டு வருந்துமிடத்து 5 முதல் 7 தினங்களுக்குத் தினமும் 15 முதல் 20 கிறேய்ன் குயினைனும் பாவித்துவரவேண்டுமென ஆலோசனை கூறியிருக்கின்றது.

—பிரான்சிலே சோவியற்ஆதிக்கத்தை விரோதிக்கும் சுதந்தர கம்யூனிஸ்த கட்சி ஒன்று நவமாக ஆக்கப்பெற்று விருத்தியடைந்து வருகின்றது. இக்கட்சியின் நோக்கம் சோவியற் இரும்புத்திரையிலிருந்து விலகிக்கொள்வதேயாகும். அதனல் சோவியற் சார்புள்ள பிரான்சிய கம்யூனிஸ்த கட்சி கலக்கமடையத் தொடங்கியிருக்கிறது.

## சின்னமடுத் திருநாள்

சரவணை, சின்னமடுப்பதியிலே பரிசுத்த செபமாலைமாதாவின் திருநாளும், அதற்கு முந்திய திருவிழாக்களும் வழமைபோல் இவ்வருடமும் ஆடம்பரமாய்க் கொண்டாடப்படும். திருவிழாக்கள் ஆடிமாதம் 26-ம திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஆவணிமாசம் 5-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை திருநாள்முடிவாகும்.

திருப்பதியிலே பகாவந். மேற்றிராணி ஆண்டவரும், பலகுருமாரும் சமூகமாயிருப்பார்கள்.

யாத்திரிகளுக்கு வேண்டிய வசதிகளெல்லாம் செய்யப்படும்.

கட்டளைக்குரவர்.

## இஸ்பிரீ. ஆக. பின்வரும்
## 11-ம் ஞாயிறு

### சுவிசேஷ வாசிப்பு
(மாற். 7 : 31—37)

அக்காலத்தில்யேசுநாதர்மறுபடியும் தீரின் எல்லைகளைவிட்டுப் புறபபட்டு, சீதோன்வழியாகத் தெக்கப்போலிஎன்னும் நாட்டின் எல்லைகளின் நடுவே கலிலேயாவின் கடலருகேவந்தார். அப்போது ஊமையனும் செவிடனுமானஒருவனை அவர் சமுகத்திற் கூட்டிவந்து அவர் தமதுகரத்தை அவன்மேல் வைக்கும்படி மன்ருடினர்கள். அவரோ சனக்கூட்டத்தினின்று அவனைத்தனியே அழைத்துக்கொண்டுபோய், அவனுடையசெவிகளுக்குள் தம்முடைய விரல்களைவைத்தார்; உமிழ்ந்து அவனுடையநாவைத் தொட்டார்; வானத்தை அண்ணாந்து பார்த்துப் பெருமூச்செறிந்து எப்பேத்தாஎன்று அவனுக்குச் சொன்னர்; அதற்குத் திறக்கப்படுஎன்று அர்த்தமாம். அக்ஷணமே அவனுடையசெவிகளும் திறக்கப்பட்டு, அவன்நாவின் கட்டும் அவிழ்க்கப்படவே அவன் செவ்வையாய்ப்பேசினன். மேலும், எவனுக்கும் அதைச் சொல்லாதபடி அவர்களுக்குக் கட்டளையிட்டார். ஆயினும், அவர் எவ்வளவு அதிகமாய் அவர்களுக்குக் கட்டளையிட்டாரோ, அவ்வளவு அதிகமாக அவர்கள் அதைப் பிரசித்தப்படுத்தி: இவர்எல்லாவற்றையும் நன்ருய்ச்செய்தார். செவிடரைக்கேட்கவும், ஊமைகளைப் பேசவும் செய்தருளினரென்று சொல்லி மேன்மேலும் அதிசயப்பட்டார்கள்.

கிறீஸ்துவே, உமக்குப் புகழ் உண்டாவதாக.

—யப்பானிய யுத்த குற்றவாளிகளாய்ச் சிறையிலிருந்துவந்தவர்களில் மேலும் பத்துப்பேரை நேசதேசங்களின் பிரதமசேனபதி சென்றசனிக்கிழமை உறுதிமொழியின்பேரில் விடுதலைசெய்திருக்கின்ருர். இவர்களுடன் இதுவரை அவ்வாறு விடுதலைசெய்யப்பட்டுள்ளவர்கள் 301 பேர். முந்திய பதின்மரில் யப்பானிய சேனையின் 8-வது படைவகுப்பின் சேனபதியாயிருந்த லெவ்ரினன்ட்ஜெனறல் ஷிப்யாமா என்பவரும் ஒருவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது வர்த்தமானம்

—※—

## ஓர் அதிசய கடிகாரம்

ஆயிரம்வருடகாலத்தில் ஓர் செக்கனுக்குமேல் ஒருபோதுமே இழந்துபோகாததென்று பெருமைபாராட்டப்படும் ஓர் அதிசயகடிகாரம் தென்மார்க்குதேச கொப்பெனேகன் நகரமண்டபத்திலே ஸ்தாபிக்கப்படவிருக்கின்றது. அந்நாட்டின் முதன்மைவாய்ந்த வானசாஸ்திரியாக விளங்கியிருந்து இற்றைக்கு ஆறு வருடங்களின்முன் காலஞ்சென்ற ஜென்ஸ் ஒல்சென் என்பவர் தனது வாணாள் முழுவதும் நிர்மாணித்துச்செய்த வேலை இதுவாகும். இந்தக்கடிகாரம் பத்துமுகங்களை உடையது. இது நேரத்தைக்காட்டுவது மாத்திரமல்ல, நட்சத்திரகதியால் அளபடும்நேரத்தையும், சூரியன், மற்றும் கிரகங்களின் நிலையையும் பதிவுசெய்கின்றது. இன்னும் அடுத்துநிகழும் 4,000 வருடகாலத்திலே சொல்லப்பட்ட ஓர்திகதி வாரத்திலே என்னநாளில் வருகிறதென்றும் இது காண்பிக்கக்கூடியது. இதன் யந்திர அமைப்பின் மற்றோர் பகுதியானது சந்திரகலைகளையும், மாறிவரும் விடுமுறைநாட்களின் திகதிகளையும் கணக்கிடுகின்றது. அடுத்துவரும் 25,700வருடங்களிலே நட்சத்திரநிலைமைகளைக் கண்டறிய வானசாஸ்திரிகள் இந்தக்கடிகாரத்துடன் ஆலோசிக்கக்கூடியோராவார்கள்.

## ஷெபாஇராணியின் மாளிகை

கீர்த்திவாய்ந்த நூலாசிரியரின் புதல்வரான திரு. ஆர்தர் கொனன் டொயில் என்பவர் சான்சிபாருக்கு அப்பாலுள்ள ஓர் சிறியதீவிலே ஷெபாநாட்டு இராணியின் மாளிகையைக் கண்டுபிடித்திருக்கிறாரென அறிவிக்கப்படுகின்றது. "ஷெபாவின் இராசபரிவாரத்தில் சீவித்த" பெண்மணிகளுக்கென அம்மாளிகை 400 விசேஷமாடங்களைக் கொண்டிருக்கிறது. அங்குள்ள சுதேசிகள் அந்தக் கட்டிடத்தைப் "பேய்மனை" யென்று அழைக்கிறார்கள். "இதற்குமுன் எந்த ஒரு வெள்ளைக்காரனாவது இந்தத்தீவில் கால்வைத்திருப்பானென்று நான் நினைக்கவில்லை" யென்று இவர்கூறுகின்றார். ஷெபாவின் பொக்ஷங்கள் இந்தக்கட்டிடத்தின்கீழேதான் புதைக்கப்பட்டிருப்பதாக இவர் நம்புகிறார். அதனால் லண்டன் நகரிலுள்ள புதைபொருள் ஆராய்ச்சியாளருக்கு இதைப்பற்றி அறிவிக்கவிருக்கின்றார்.

## யூகோசிலேவியாவின் அச்சம்

சோவியற் அரசின் இரும்புத்திரையிலிருந்து விலகிக்கொண்ட யூகோசிலேவியாவின் எல்லைப்புறமாயுள்ள ரூமேனியாவின் பகுதியிலிருந்து—விசேஷமாய்ப் பனாற்பகுதியிலிருந்து பொதுச்சனங்கள் தீவிரமாக வெளியேற்றப்படுவதாலே யூகோசிலேவிய அதிகாரிகள் மனக்குழப்பமடைகின்றார்கள். அவ்வாறே ஹங்கேரியின் எல்லைப்புறநீளமும் 55 மைல் உள்ளீடாகச் சனங்கள் அப்புறப்படுத்தப்படுகின்றார்கள். ஒவ்வோர்இரவும் சாமான்றெயின்வண்டிகள் ஏழும், பெருந்தொகையான லொறிகளும் கிராமவாசிகளை ரூமேனியாவின் உள்நாட்டுக்கு ஏற்றிச்செல்லுகின்றன. கருங்கடற்கரைப் பட்டணங்களிலிருந்தும் இதுபோலும் நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக அறிவிக்கப்படுகிறது.

## இஸ்ரயேலரின் பிளவு.

யூதர்களின் இஸ்ரயேல்நாட்டிலே யூதர்களில் ஒருபகுதியினர் ஓர் கூட்டமாகத்திரண்டு யூதர்களின் இராச்சியம் ஒழிந்துவிடும் நோக்கமாய்த் தினமும் பிரார்த்தனைகள் நடத்திவருவதாக டெல்அவிவ்நகரிலிருந்து செய்திகிடைத்திருக்கின்றது. இவர்கள் 'நெற்றெறல் கற்ரு' என அறியப்படும் யூதசமய திடபக்தர்களின் கூட்டத்தைச்சேர்ந்தவர்கள். மேசியாவருகிறவரையில் யூதர்களுக்கு ஓர் இராச்சியம் வேண்டியதில்லை; அதுவரையில் ரோரா சொல்லுகிறபடி லோகத்தார்மத்தியில் நாம் சஞ்சரித்துவரவேண்டும்; அதாவது "ரோராவைச் சிந்தித்துக்கொண்டிருக்கும் யூதர்களாய் நாம் இருந்துவரவேண்டியது" என்று இவர்களின் தலைவர்களில் ஒருவரான அம்றம் டிலோ எனும் யூதகுரு சாற்றுகின்றார். இந்தஇயக்கத்திலே இப்போது 2,000 யூதர்கள் சேர்ந்திருப்பதாகவும், அதிலே அனுதாபமுடையவர்களாய் வேறு பலரும் இருந்துவருவதாகவும் சொல்லப்படுகிறது.

## ருஷியரின் ஆயத்தங்கள்

ருஷியர்கள் இரட்டை எஞ்சின்பூட்டிய ஜெற் வெடிகுண்டு விமானங்களையும், "எம் ஐ ஜீ—15" எனப்படும் ஜெற் போர்விமானங்களையும் பெருந்தொகையாகவும், தீவிரமாகவும் கிழக்கு ஜேர்மனிக்கு அனுப்பிவைத்துக்கொண்டிருப்பதாக ஹெய்டெல்பேர்க் நகரிலிருந்து அமெரிக்க ஆகாயப்படைச் சமாச்சாரம் அறிவிக்கின்றது. ருஷியர்கள் தங்கள் ஆதிக்கத்திலுள்ள ஜேர்மனியின் கிழக்குப்பகுதியிலே விமானநிலையங்களை விரைவாக அமைத்துக்கொண்டும், ஜெற் விமானங்கள் ஏறியிறங்கத்தக்கதாய்ப் பழைய விமானநிலையங்களை அதிகம்நீளமாக்கிக்கொண்டும் வருகின்றார்களாம். சோவியற் விமானநிலைய அமைப்பு துரிஞ்சியாவில்தான் அதிகமாயிருக்கின்றதாம்.

## பெல்ஜிய புதிய மன்னர்

"மன்னர் நீடூழி வாழ்க" என்று ஆர்ப்பரித்துப் பெல்ஜிய பாராளுமன்றப் பிரதிநிதிகளும், செனற்றர்களும் வாழ்த்திநிற்க, அந்நாட்டின் லெயோப்போல்ட் அரசரது பட்டத்துக்குமாரனும், 20 வயசுடையவருமான படுயின் இளவரசர் பெல்ஜியர்களின் அரசராக விசுவாசப்பிரமாணஞ்செய்து இம்மாசம் 7-ந் திகதி சிம்மாசனமேறினர். வருகிற புரட்டாசி மாதம் 21 வயசடையவிருப்பவரும், பெல்ஜியர்களின் ஐந்தாவது அரசருமான இவர் பிந்தச் சனங்களெல்லாம் ஆர்ப்பரித்துவாழ்த்திநிற்க வீதிகளில் பவனிசென்றார். இவர் தந்தையாரான லெயோப்போல்ட் அரசர் தற்போது தென்பிரான்சிலே அன்ரிபெஸ் எனுமிடத்தில் வசித்துவருகின்றார். இவர்முதல்நாள் 6-ந்திகதி சிம்மாசனந் துறக்கலாயினர்.

## ஸ்பானிய தேச தளங்கள்

மேற்கு ஐரோப்பாவின் பாதுகாப்பு விஷயமாய் ஸ்பானிய கடற்படை—ஆகாயப்படைத் தளங்களை உபயோகிப்பதுபற்றி அமெரிக்க ஐக்கியதேசத்துக்கும் ஸ்பெயினுக்குமிடையே ஓர் உடன்பாடு ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது. அத்திலாந்திக் உடன்படிக்கை நாடுகளுடன் இராஜீய உறவை விருத்திசெய்யவிரும்பி ஜெனறல் பிராங்கோ அவர்கள் ஸ்பானிய அரசாங்கத்தைப் புதிதாகத் திருத்தி அமைத்திருக்கிறாரென மதிரித் நகரிலிருந்து செய்திகிடைத்திருக்கிறது. இதற்கிடையிலே ஸ்பெயினிலுள்ள தளங்களை அமெரிக்க ஐக்கியதேசத்துக்கு விட்டுக்கொடுக்கவும், அவசியம் நேருமிடத்து ஸ்பெயினுக்குவெளியிலும் ஸ்பானியபடைகளை உதவுதற்கும் ஜெனறல் பிராங்கோ இணங்கிவிட்டாரென்று சோவியற்ரேடியோ செய்தி பரப்பியிருக்கிறது.

---

—ஸ்பெயினிலுள்ள யுத்த கேந்திர தளங்கள் மேற்குஐரோப்பாவின் பாதுகாப்புக்கு மிகமுக்கியமானவைகளாகும். அதனால் அமெரிக்கவரசு ஸ்பெயினுடன் உடன்படிக்கைசெய்து அதன் தளங்களைப் பெற்றுக்கொள்ள முயற்சிக்கின்றது. இதையிட்டுப் பிரித்தானிய கம்யூனிஸ்தகட்சி கூச்சலிட்டு, ஜெனறல் பிராங்கோவுடன்செய்யும் எந்தவிதமான [illegible] தத்துக்கான ஓர் நடவடிக்கையாகுமெனக் கூறுகின்றது.

---

# குருப்பட்டாபிஷேக வைபவம்

வங்காலை சந்தானுமாதாவின் புதுப்பிக்கப்பெற்ற ஆலயத்தில்
யாழ்ப்பாண மேற்றிராணியாராகிய
**மகாவந். J. எமிலியானுஸ்பிள்ளை, O. M. I.**
ஆண்டவரவர்கள்
**வண. A. பிரான்சிஸ் குலாஸ், O. M. I.**
விறதர் அவர்கட்கு
திருப்பட்டமாகிய குருப்பட்டம் அருளுவார்.

### நிகழ்ச்சிகள்

16-8-1951 வியாழக்கிழமைமாலை 5 மணிக்கு மேற்றிராணிஆண்டவர் அவர்களின் வரவு, புதியகோவில் ஆசீர்வதிப்பு, நன்றித்தோத்திர ஆசீர்வாதம், மேற்றிராணிஆண்டவருக்கு உபசாரணை.

17-8-1951 வெள்ளிக்கிழமைகாலை 7 மணிக்கு குருப்பட்டாபிஷேகச்சடங்கு.

18-8-1951 சனிக்கிழமைகாலை 7 மணிக்கு புதியகுருப்பிரசாதியின் முதல் திவ்வியபூசை. முற்பகல் 10 மணிக்கு உபசாரணையும், வீட்டுக்கொண்டாட்டமும், பின்னேரம் 4 மணிக்கு முதற்சற்பிரசாத ஆசீர்வாதமும்.

19-8-1951 ஞாயிற்றுக்கிழமைகாலை 7 மணிக்கு புதியகுருவரின் முதற்பாடற்பூசை.

கவனிப்பு:—(1) 16-ந்திகதி வியாழக்கிழமைபின்னேரம் 5 மணிக்கு வங்காலைக் கிறீஸ்தவர்களும், அயலூர்க் கிறீஸ்தவர்களும் ஒன்றாய்ச்சேர்ந்து நின்று வங்காலைப்பிரதமசந்தியில் மேற்றிராணிஆண்டவரை வரவேற்றல்.

(2) சந்தானுமாதாவின் புதுப்பிக்கப்பட்ட ஆலயத்தில் முதன்முதல் நிறைவேறும் குருப்பட்டச்சடங்கு இதுவே. கிறீஸ்தவர்கள் தவறாமல் இந்தச்சடங்கைக் கண்ணுற்று நன்மை அடைவார்களாக.

(3) குருப்பட்டத் திருச்சடங்கு விளக்கப்புத்தகம் 17-ந் திகதிகாலை கோவில்கதவில் இனாமாகக் கொடுக்கப்படும். அதையும்பெற்று வாசித்துப் பலனடைவார்களாக.

சந்தானுமாதாகோவில்
வங்காலை.

S. Gomez, O. M. I.
கட்டளைக்குரவர்.

---

# நானா சங்கதிகள்

—※—

—சென்ற மகாயுத்தத்திலே பிரான்ஸ் தேசத்தை ஜேர்மனியர் அடிப்படுத்தியிருந்தபோது அத்தேச அரசாங்க தலைவராயிருந்து ஜேர்மனியோடு ஒத்துழைத்தாரென்ற குற்றச்சாட்டின் பேரிலே சீவபரியந்த சிறைத்தண்டனை பெற்றிருந்த மாஷல் பெத்தேன் அவர்களின் சுகநிலை மிகமோசமடைந்து அவர்மிகவும் அபாயநிலையிற் இருக்கிறாரெனச் செய்திகிடைத்திருக்கிறது. இவருக்குத் தற்போது வயசு 95.

— கத்தோலிக்கருக்கும், பூர்வீக கிரேக்க பிரிவினைச்சபைக் கிறீஸ்தவர்களுக்குமிடையே நல்லிணக்கத்தை உண்டுபண்ணும் நோக்கத்துடன் இஸ்ரயேல் நாட்டில் "ஐக்கிய நண்பர்கள் சங்கம்" ஒன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. செபத்தைக்கொண்டு கிறீஸ்தசபைகளின் மத்தியில் திரும்பவும் ஐக்கியத்தையும், இணக்கத்தையும் உண்டுபண்ணுவதே இதன் நோக்கமாகும்.

—பிரான்சிய புதிய பாராளுமன்ற அங்கத்தவர்களாய் மூன்று குருப்பிரசாதிகளும் தெரிவு செய்யப்பெற்றிருக்கிறார்கள். டிஜொன்நகரின் சுயேச்சை மேயரான கனன் கேர் சுவாமியாரும், கார்காசொன் தொகுதிக்கு 'எம். ஆர். பி.' எனப்படும் கத்தோலிக்ககட்சியின் பிரதிநிதியான வண. கேர் சுவாமியாரும், கிறீஸ்தமுன்னேற்ற கட்சியைச்சேர்ந்த வண. பீற்றர் குரூஸ் சுவாமியாருமே அம்மூவருமாவர்.

—ஸ்பானிய அரசாங்க தலைவரான ஜெனறல் பிராங்கோ அவர்கள் சென்ற வெள்ளிக்கிழமை ஓர் புதிய அரசாங்கத்தை ஆக்கியிருப்பதாக மதிரித் நகரிலிருந்து தந்திச்சமாச்சாரம் எட்டியிருக்கிறது. அவரின் புதிய மந்திரிசபை 15 பேரை அடக்கியிருப்பதாகவும் அவரது ஆட்சியிலே அதிகம் தாராளப்போக்கை அது தந்திருப்பதாகவும் அச்செய்தி அறிவிக்கின்றது.

—இத்தாலியின் தென்பாகத்திலுள்ள சிசிலிதீவிலிருந்து பன்னீராயிரம்பேர் வெளிகொண்டு ஆஸ்திரேலியாவிற் போய்க் குடியேறவிரும்புகிறார்கள். இதற்குக் காரணம் பிழைப்பில்லாத் திண்டாட்டமே. அத்தீவு வாசிகளில் மூன்றரைலட்சம்பேர் பிழைப்பில்லாது தவிக்கின்றார்களாம். இவர்களில் அநேகர் ஆபிரிக்காவிலிருந்த இத்தாலிய நாடுகளிலிருந்துவெளியேறியவர்களே.

*    *    *

அமெரிக்க ஐக்கியமாகாணத்திலிருந்து சீனாவுக்குப் புறப்பட்டுச் சென்ற ஒரு கப்பலின் மேல்தட்டில் சாய்ந்து நின்று இருவர் பேசிக்கொண்டிருந்தனர். ஒருவர் குருவானவர். மற்றவர் வியாபாரி.

"சீனாவுக்கா போகிறீர்கள்?" என வியாபாரி வினவினார்.

"ஆம், வேதம்போதிக்கப் போகிறேன்."

"சீனாவுக்குக் குருமாரை அனுப்பிப் பயனில்லை. ஒரு முறை யேர்பி என்ற ஒரு குருவானவர் அங்கு போயிருந்தார். கலகக்காரர் அவரைத் தூக்கிக்கொண்டு போய்விட்டனர். மீட்புப் பணமாகப் பெருந்தொகைப்பணம் கேட்டனர். பணம் வரப்பிந்தின ஒவ்வொரு வாரத்துக்கும் ஒவ்வொரு கைவிரலாக அவரது மூன்று விரல்களைத் துண்டித்தனர். அந்தக் குருவானவர் இப்பொழுது அமெரிக்காவில்தான் இருக்கிறார். இனிமேல் சீனாவுக்குப் போகமாட்டார். ஆதலின் நீங்களும் கவனமாயிருங்கள். உங்கள் விரல்களும் மறைந்துபோகலாம்" என வியாபாரி கூறினார்.

சுவாமியார் ஏதோசொல்ல வாயெடுத்தார். அதற்குள் சாப்பாட்டுக்கு மணியடித்துவிட்டது. இருவரும் கைகுலுக்கிப் பிரிந்தனர். ஆனால், அந்தக் குருவானவரின் கைஒன்றில் மூன்று விரல்கள் குறைபட்டதை அந்தவியாபாரி கவனிக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநாள் அட்டவணை

ஆடிமாதம் 1951

| | | | |
|---|---|---|---|
| வெ | 27 | அ. பந்தலேயோன் | (சி) |
| சனி | 28 | அ. நசாறியுஸ் | (சி) |
| ஞா | 29 | இஸ். பின். 11-ம்ஞாயிறு—அ. மார்த்தம்மாள் | (ப) |
| திங் | 30 | அ. அப்தோனும் சென்னெனும் | (சி) |
| செ | 31 | அ. லோயலா இஞ்ஞாசி. | (வெ) |

ஆவணிமாசம்

| | | | |
|---|---|---|---|
| புத | 1 | அ. இராயப்பர் சங்கிலி. | (வெ) |
| வியா | 2 | அ. லிகோரியார் | (வெ) |


# சத்தியவேத பாதுகாவலன்

1951-ம் ஆண்டு
ஆடிமாதம் 26-ந் திகதி


## கம்யூனிஸ்த சீனு

கம்யூனிஸ்தசீனுவின் தலைவரான மோ-ரிஸி-துங் என்பவர் சோவியற்அரசைப் பின்பற்றப்போய்— அதன் ஆலோசனையைக் கேட்கப்போய்—அதன் அடிச்சுவடுகளில் நடக்கப்போய் இன்றுமுக்கியமான மூன்று பிரச்சினைகளைத் தீர்க்கும்வகையறியாது தியங்குகின்றார். அப்பிரச்சினைகள்தான் எவை? கோறியயுத்தத்துக்கு ஓர்முடிபு காணவேண்டும்; அதிற்சிக்குண்டு திக்குமுக்காடிக்கொண்டிருக்கும் சீனஇராணுவபலங்களை மீளவும் தருவித்துக்கொள்ளவேண்டும்; அதையும் சீனுவின் கௌரவத்துக்குப் பங்கமில்லாதவகையிலே செய்யவேண்டுமென்பதே முதலாவது பிரச்சினையாகும். சீனுவிலே பலங்கொண்டுள்ள சோவியற்ருஷியாவின் ஆதிக்கத்தைக் குறைத்துக் கடைசியாக அதனை முற்றாக அற்றுப்போகச் செய்யவேண்டும்என்பதே இரண்டாவது பிரச்சினையாகும். யாங்ஸி நதிக்குத் தென்புறமாகக் கம்யூனிஸ்த ஆட்சியிலே இன்னமும் கட்டுப்படாது திமிறிக்கொண்டிருக்கின்ற கோடிக்கணக்கான சீனமக்களை எந்தவிதமும் கட்டுப்படுத்த வேண்டும் என்பதே மூன்றாவது பிரச்சினையாகும். சீனுவைப்பற்றி நன்கறிந்தவரும், இற்றைக்கு ஆறு வாரங்களின் முன்னரே ஷாங்காய் நகரிலிருந்து திரும்பியவருமான ஐரோப்பிய இராஜீயப் பிரதிநிதி ஒருவரே இந்தஇரகசியங்களை வெளியிட்டிருக்கின்றார். இம்மூன்று பிரச்சினைகளையும் பற்றிக் கம்யூனிஸ்த சீனஅரசாங்கம் மிகுந்தகவலையுடன் சிந்தித்துக் கொண்டிருக்கும் இந்த வேளையிலே சீனக்கம்யூனிஸ்த கட்சியும் கொள்கையளவிலே இரண்டுபட்டு அவ்விரண்டுக்குமிடையே பெரும்பிணக்கு ஏற்பட்டுள்ளது. அவற்றில் ஒன்று மோ-ரிஸி-துங் என்பவரைத் தலைமையாகக்கொண்டது. இது சீனுவிலே தேசியகொள்கையை ஆதரிப்பது. மற்றது, லிபு-ஷாவோ-சியைத் தலைமையாகக் கொண்டது. இதுசோவியற்சார்புடையதாய் இன்று சீனுவிலே முக்கியத்துவம் அடைந்து கொண்டு வருகின்றது. அதனால்மூன் சொன்ன மூன்றுபிரச்சினைகளையும்விரைவிலேதீர்த்துக்கொள்ள மோ-ரிஸி-துங் பெரிதும் ஆத்திரப்படுகின்றார். கோறியயுத்த சமரசப்பேச்சுகள் நன்மையாக முடியுமிடத்து அங்கு போராடும் சீனஇராணுவபலங்களைத்தருவித்துக்கொள்ளலாம்; அதன்மேல் மற்றிருபிரச்சினைகளையும் தீர்க்க வழிதேடலாமென இவர் கருதுகின்றார். ஆனல், கோறியயுத்த நிறுத்த மகாநாடு கூடிக்கூடிக் கலைவதாயல்லாது காரியம் ஒன்றும் இப்போதைக்குக் கைகூடுவதாய்க் காணவில்லை. தனது சின்னிவிரலைத்தானும் அசையாது மறைமுகமாகநின்று கோறியயுத்தத்தைத் தூண்டி நடத்திக்கொண்டிருக்கும் சோவியற்அரசு மோ-ரிஸி- துங்கின் சூழ்ச்சியை அறியாதிருக்குமா? சீனுவிலே தான் கொண்டிருக்கும் ஆதிக்கம் குன்றுவதை வாளாவிருந்துபார்த்துக்கொண்டிருக்குமா? அதனல் மோ-ரிஸி-துங் இருதலைக்கொள்ளி எறும்புபோல் இடர்ப்படவேண்டிய சங்கடநிலைமை இன்று ஏற்பட்டுள்ளது. இதற்கிடையிலே ஜெனறல் சியாங்-கை-ஷெக்கைத் தலைமையாகக்கொண்டுள்ள தேசியசீன அரசாங்கம் போர்மோசாவிலே அமெரிக்கவரசின் துணையைப்பெற்று இராணுவபலம் அடைந்துகொண்டிருப்பதும், நினையாத வேளையிலே அது தென்சீனுவில் படையெடுக்குமோவென்ற அச்சம் இருந்துகொண்டுவருவதும் மோ—ரிஸி—துங்குக்கு மற்ருேர் பெரியகவலையைத் தருவதாகின்றது. இந்த நிலைமையிலே கம்யூனிஸ்தசீனுவின் கலக்கநிலைமை இப்போதைக்குத் தீருமென்று நினைக்கஇடமேயில்லை.

## கோறிய யுத்த நிறுத்த மகாநாடு

கோறியயுத்தம் ஓர் இழுபறி யுத்தமாய் நடந்ததுபோலவே கோறிய யுத்தநிறுத்த மகாநாடும் ஓர் இழுபறி மகாநாடாக நிகழ்ந்துகொண்டிருக்கிறது. ஐக்கியநாடுகளின் பத்திரிகாநிருபர்களைக் கம்யூனிஸ்த பிரதிநிதிகள் அனுமதிக்கமறுத்த காரணமாக ஓர் பிணக்குஎழுந்தது. அதன்விளைவாய் மகாநாடு முறிந்துவிடுமோஎன்ற அச்சம் பிறந்தது. கோறியாவில்நின்று போராடும் பிறநாடுகளின்படைகள் அங்கிருந்தும் வெளியேறிவிடவேண்டுமென்று கம்யூனிஸ்த பிரதிநிதிகள் ஓர் நிபந்தனை விதித்தார்கள. அதற்கிணங்க ஐ. நா. பிரதிநிதிகள் மறுத்துவிட்டார்கள். கோறியாவில் முற்ருகச் சமரசம் ஏற்படுகிற வரையிலே ஐ. நா. படைகள் அங்கிருந்து வெளியேறமுடியாதென்று அமெரிக்கவெளிநாட்டு மந்திரியார் அழுத்தமாகத் தெரிவித்துவிட்டார். இதிலும் ஏதேனுமுறிவு ஏற்படுமோஎன்ற அச்சம்பிறந்தது. அதன்மேல் மகாநாடுகூடும் கேசோங் நகரைச் சூழவரப் பெருவெள்ளமுண்டாக, அதனல் ஐ. நா. பிரதிநிதிகள் [illegible] லாது தலை[illegible] ஓர் சகுனப்பிழையாயிற்று. அதன்மேல் கம்யூனிஸ்த பிரதிநிதிகள் ஐந்துநாள்தவணை கேட்டதின்பேரிலே மகாநாடுபின்னரும் நிறுத்தப்படலாயிற்று. இவ்விதம் ஒருபால் மகாநாடு நிகழ்ந்துகொண்டிருக்க, மறுபால் யுத்தமும் விடாமல்நடந்துகொண்டிருக்கிறது. அதனல் எல்லாம் இழுப்புப்பறிப்பாகவே இருந்துவருகிறது. கோறியாவிலே சென்ற ஒருவருடகாலத்திலும் நிகழ்ந்த கொடிய யுத்தத்தால் ஏற்பட்டுள்ள பயங்கர உயிர்ச்சேதமும், பொருட்சேதமும் ஆகியஎல்லாம் கம்யூனிஸ்த ஆக்கிரமிப்பிலிருந்து சுதந்திரத்தைப் பாதுகாத்துவைக்குமாறு உலகம் கொடுக்கவேண்டியிருந்த ஓர் பலியாகிவிட்டது. அதனல் தங்கள் ஆக்கிரமிப்புச்செயல் பலன்தரமாட்டாதென்பதைக் கம்யூனிஸ்தர்கள் இதுவரை நன்குஉணர்ந்திருப்பார்களெனலாம். பிற விஷயங்களில் தங்களிடையேயுள்ள வேறுபாடுகள் எவ்வாறு இருந்தபோதிலும் தங்கள் சுதந்திரத்தைப் பாதுகாத்து நிலைபெறச் செய்துவைக்குமாறு உலகிலுள்ள சுதந்திரநாடுகள் தம்முள் ஐக்கியமுற்று ஒருங்கே திரண்டுவிட்டனஎன்பது நிச்சயம். கோறியாவிலே யுத்த நிறுத்தஞ் செய்துவைக்க ருஷியா எடுத்துக்கொண்ட முயற்சியானது சமீபத்திலே அங்கு சமாதானம் ஏற்படுமென்ற நம்பிக்கையைப் பிறப்பிக்கலாயிற்று. ஆனல், சுதந்திரமும் கம்யூனிஸமும் கொள்கையளவிலே ஒன்றுக்கொன்று முற்றிலும் முரண்பட்டவைகள். ஆகவே, கோறியாவிலோ அன்றேல் வேறுஎவ்விடத்திலோநிரந்தரசமாதானம்ஏற்படவேண்டுமாயின் சோவியருஷியா தனது குரூரத்தனமான ஆக்கிரமிப்புக்கொள்கையை விட்டுக்கொடுக்கவேண்டும். அன்றேல் சமாதானம்என்பது முயற்கொம்பாகவே முடியுமென்க.

## சுதேசவர்த்தமானம்

### வின்சென்ற் டீ போல்திருநாள்

யாழ்ப்பாணத் தருமசபைப்பங்திகளின் பாதுகாவலரான சென் வின்சென்ற் டீ போலின் திருநாள் சென்ற 19-ந்திகதி வியாழக்கிழமை அதிவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது. அன்றுகாலை வண. M. S. நல்லையாச் சுவாமியவர்கள் அர்ச். சூசையப்பர் கூட்டச் சின்னக்கோவிலில் திருநாட் பூசைநிறைவேற்றிச் சென். வின்சென்ற் டீ போலின் சீவியத்தைப்பற்றியும், ஏழைகளுக்கு அவர்செய்த சேவையைப்பற்றியும் ஓர்அரியபிரசங்கம்செய்தனர். அங்கத்தவர்பலர் சமுகமளித்துத் திவ்வியநற்கருணை பெற்றுக் கொண்டார்கள்.

### வின்சென்ற் டீ போல் சபை

யாழ்ப்பாணம் சென் வின்சென்ற் டீ போல் தருமசபைப்பங்திகளின் 1951-ம்ஆண்டிற்கான 3-வது கால்வருடப் பொதுக்கூட்டம் அடுத்துவரும் 29-7-51 ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்குச் சென்சாள்ஸ்பாடசாலையில் நடந்தேறும். தனிச்சங்க [illegible] திரு. ஆர். ஜே. போல் அவர்கள் தலைமைவகிப்பார். அத்தருணம வண. M. S. நல்லையா சுவாமியவர்கள் "கத்தோலிக்கரின் தருமசேவை" என்னும் விஷயமாய் ஓர் சொற்பொழிவாற்றுவார். சகலபங்திகளினதும் ஞானத்தலைவர்களும், அங்கத்தவர்களும், உபகாரிகளும் சமுகமளிக்குமாறுவேண்டப்படுகின்றார்கள்.

### விமானத் தபால்

யாழ்ப்பாணத்துக்கும், யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள மறு இடங்களுக்கும் அனுப்பப்படும்விமானத் தபால்கள் சென்றவாரந்தொடக்கம் ஞாயிறு தவிர்ந்த ஏனையநாட்களிலே கொழும்பிலிருந்து தினமும் காலை 7 மணிக்குப் புறப்படும் விமானத்தில் அனுப்பப்படுகின்றன. இந்தத் தபால்கள் கொழும்புப் பிரதம தபாற்கந்தோரில் அதிகாலை 4 மணிக்குக் கட்டப்படுகின்றன. யாழ்ப்பாணத்திலும், யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள மறுஇடங்களிலுமிருந்து கொழும்புக்கு அனுப்பப்படும் விமானத்தபால்கள் சனிக்கிழமை தவிர்ந்த ஏனையநாட்களிலே பிறபகல் 1-45 மணிக்குக் காங்கேசன்துறையிலிருந்து புறப்படும் விமானத்தில் அனுப்பப்படுகின்றன.

### நன்கொடையாக வரும் மா

கொழும்புத் திட்டத்தின்கீழ் ஆஸ்திறேலிய அரசாங்கம் இலங்கைக்கு மூன்றுலட்சம் பவுண் பெறுமதியான கோதுமை மா நன்கொடையாகஉதவ முன்வந்திருக்கிறது. நமது அரசாங்கமும் அதனை ஏற்று இவ்வருடத்திலே நன்குபயன்படுத்துதற்கான ஒழுங்கு செய்திருக்கிறது. 6,000 தொன் நிறையான இந்த மாவை விற்றுவரும் பணம் கொழும்புத்திட்டத்தின்கீழ் இந்நாட்டின் அபிவிர்த்திக்காகச் செலவிடப்படவிருக்கிறது.

### குரூரக்கொலை வழக்கு

கண்டிச் சுப்பிறீங் கோட்டிலே றன்ஹாமி எனும் கொலைக்குற்றவாளி ஒருவன் சென்ற சனிக்கிழமை பிரதம உபநீதியாசரான சங். டயஸ் அவர்களால் மாரணதண்டனை விதிக்கப்பட்டபோது, தனது இருகரங்களையும் மேலே உயர்த்திச் சாது சாது சாது என்று மும்முறை கூச்சலிட்டான். இவன் பொத்துகரைக்குச் சமீபமான பதில்வத்தைத் தோட்டத்தின் கண்டக்றரான லூயிஸ் பெறேரா என்பவனைக் கொலைசெய்ததில் குற்றவாளியென்று தீர்க்கப்பட்டான். இவன் செய்த கொலை "மகாஅட்டூழியமான தாக்குதல்"என்று சொல்லப்பட்டது. கொலையுண்டவனின் உடலிலே இருபதுக்குக் குறையாத குத்துக்காயங்கள் இருந்தன. அவற்றிற்சில சுவாசப்பைகளையும், இருதயத்தையும், ஈரலையும் ஆழமாக ஊடுருவியும், தொண்டையை வெட்டியுமிருந்தன.

### மாஷல்பெத்தேன் காலஞ்சென்றார்

ஓர் காலம் பிரான்ஸ் தேசத்தின் வீரர் திலகமாய் விளங்கியிருந்தவரும், இரண்டாவது உலகயுத்தத்திலே ஜேர்மனியர்கள் பிரான்சை ஆக்கிரமித்தபோது விஷிநகரைத் தலையிடமாகக் கொண்ட பிரான்சிய அரசாங்க தலைவராயிருந்து நாட்டைக்காட்டிக் கொடுத்த தேசதுரோகியென்ற குற்றச்சாட்டின்பேரிலே சீவபரியந்த சிறைத்தண்டனை விதிக்கப்பெற்றிருந்தவருமான மாஷல்ஹென்றி பிலிப்பி பெத்தேன் அவர்கள் சென்ற 22-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை காலஞ்சென்ருரெனப் பரீஸ்நகரிலிருந்து செய்திகிடைத்துள்ளது.

### உள்நாட்டு நெல்விலை

இலங்கையிலே விளைவிக்கப்படும் உள்நாட்டுநெல்லைக் கமக்காரரிடமிருந்து புசல்ஒன்று ஒன்பது ரூபாவாக வாங்குவதென்று அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. இந்தஉத்தரவாதவிலை வருகிற ஆவணி மாதம் தொடக்கம் நடைமுறைக்குவரும். இந்த உயர்ந்த உத்தரவாதவிலை மூன்றுவருடங்களுக்கு நீடித்திருக்கச் செய்வதென அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செவாலியர் ஐ. எக்ஸ். பெறேய்ரு அவர்களின் தேகவியோகம்

இலங்கை—இந்திய பாதகுலப் பிரமுகர்களில் ஒருவராய், உத்தமகத்தோலிக்க பிரபுவாய், செல்வஞ் செல்வாக்குடையவராய், பிரபலவர்த்தகராய், தருமசீலராய், பாப்பரசரின் நைற்பட்டவர்த்தனராய் விளங்கியிருந்தவரான செவாலியர் திவான்பகதூர் ஐ. எக்ஸ். பெறேய்ரு அவர்கள் சென்ற 21-ந்திகதி சனிக்கிழமைகாலே கொழும்பிலுள்ள தமது வாசஸ்தலத்திலே காலஞ்சென்றாரெனும் துயர செய்தியை அறிந்து மனம்வருந்தலானோம். மரிக்கும்போது இவருக்கு வயசு 63. சட்டசபையிலும், அரசாங்க சபையிலும் இவர் நெடுங்காலம் ஓர் இந்திய பிரதிநிதியாயிருந்து இலங்கைவாழ் இந்தியமக்களின் நலன்களைக் கவனித்து ஆற்றிவந்த அருஞ்சேவைகளைப்பாராட்டி இந்திய அரசாங்கம் இவருக்குத் திவான்பகதூர் எனும் மகிமைவரிசையைச் சன்மானிக்கலாயிற்று. அவ்வாறே இவரது மகத்தான கத்தோலிக்க சேவைகளைப்பாராட்டிப் பரிசுத்த பாப்பரசர் அர்ச். சில்வேஸ்தரின் நைற்பட்டம் வழங்கி இவரைச் சன்மானிக்கலாயினர். இவரின் மறைவாலே பாதசாகியம் தனது பெருந்தலைவர்களில் ஒருவரை இழந்து கவலைகொள்வதாயிற்று.

R. I. P.

## இளநீர்ப்பானம்

தேங்காயிலிருந்து கிடைக்கும் இளநீரைச்சேர்த்து ஓர் பானமாகப் போத்தல்களில் அடைத்துப் பாதுகாக்கும் விஷயமாய் நடத்தப்பட்டுவந்த பரிசோதனைகள் முற்றாகப்பலன் தரவில்லை; ஏனெனில், எல்லாப் பரிசோதனைகளிலும் அதன் சுவையும், ரசமும் பழுதாய்ப்போயின என்று தெங்குப்பொருள் ஆராய்ச்சித்திட்ட தலைவர் தமது அறிக்கையிலே வெளியிட்டிருக்கின்றார்.

### கைத்தறி நெசவுதொழில்

இலங்கையிலே பருத்திநூல் இறக்குமதி படிப்படியாகக் குறைந்துகொண்டு வருகின்றது. அதனால் கைத்தறிநெசவு தொழிலுக்குப் பெரிதுப்பங்கம் ஏற்பட்டிருக்கிறது. தற்போது இலங்கையிலே பதினாயிரம் கைத்தறிகள்வரையில் இருக்கின்றன. ஆனல், போதிய நூல் கிடையாமையால் அவற்றில் ஐயாயிரம் கைத்தறிகள்மட்டுமே வேலைசெய்து வருகின்றன. இந்தியாவிலும் அமெரிக்க ஐக்கியதேசத்திலுமிருந்தே இலங்கை பருத்திநூல்தருவிக்கின்றது. சென்றவருடம் 36,200 றாத்தல் நூல் தருவிக்கப்பட்டது. கைத்தொழில் மந்திரியாரது கேள்வியின் பேரிலே இவ்வருட ஆரம்பத்தில் இந்தியஅரசாங்கம் இலங்கைக்கு 1,500 சிப்பம் நூல் அனுமதித்தது. ஆனால், எல்லாத்தறிகளும் வேலைசெய்கிறதாயின் 3,500 சிப்பம்நூல் தேவைப்படும். அடுத்த புரட்டாசி மாதத்துள் இந்தியாவிலிருந்து மேலும் 1,000 சிப்பம் நூல் கிடைக்கும் போலிருக்கிறது. ஆயினும் இதுவும் போதியதன்று. அதனால் யப்பானிலிருந்து நூல்தருவிக்க முடியுமா என்பதுபற்றிக் குடிசைக்கைத்தொழிற்பகுதி ஆலோசனை செய்துவருகிறது.

*  *  *

—சத்துருவிமானங்களும், இலக்குப்பார்த்துச் செலுத்தப்படும் குண்டுகளும் தூரத்தில்வரும்போதே அவைகளைக்கண்டறிந்து வெளிப்படுத்தவல்ல 300 றுடர் செற்றுகளைப் பிரித்தானி, பெல்ஜியம், ஒல்லாந்து, நோர்வே, தென்மார்க், இத்தாலி ஆகிய ஆறு நாடுகளுக்கும் கனடா இலவசமாக அனுப்பியிருக்கிறது. இந்த ஆறு நாடுகளும் கனடாவின் அத்திலாந்திக் உடன்படிக்கையில் சேர்ந்தவைகளாகும்.

## குருத்துவ வெள்ளியூபிலி விழா.

தனது அருமருந்தன்ன குருபுதல்வர்களில் ஒருவரான வண. S. J. வேதநாயகம் சுவாமியவர்களின் குருத்துவ வெள்ளியூபிலிக் கொண்டாட்டத்தாலே அச்சுவேலிப்பதியானது சென்ற 15-7-51 ஞாயிறுவாரம் அளித்துநின்ற குதூகலகாட்சியோ வருணிக்குந்தரமன்று. அன்று காலை யூபிலிநாயகர் குருப்பிரசாதிகள் இருவரோடும், தமது சகோதரர் செவாலியர் எஸ். அருளானந்தம்அவர்களோடும் அர்ச். சூசையப்பர்கோவில் வந்துசேரவே, மங்கலவாத்தியங்கள் இசைத்தன. மணிகள் இன்பவோசை செய்து ஆர்ப்பரித்தன. மக்கள்குழாம் மகிழ்ச்சிபொங்க விழாநாயகரைக் கட்டளைக்குரவர்சமேதராய் வரவேற்று நின்றது.

அதன்மேல் தேசோமயமாய்விளங்கிய சஞ்சூசைமாதவனின் ஆலயபலிபீடத்திலே வண. பி. நீக்கலஸ், வண. பி. ஈ. அல்விறெட்எனும் குரவர்கள் இருவரும் துணைபுரிய, யூபிலிக்குரவர் தேவதோத்திர பாடற்பூசை நிறைவேற்றினர். அத்தருணம வண. ஜி. ரி. பாலசுந்தரம் சுவாமியவர்கள் "நான்அவர்களுக்கு உம்முடையவாக்கியத்தைக் கொடுத்தேன். நான்உலகத்தான் அல்லாததுபோல அவர்களும் உலகத்தார்அல்ல. ஆதலால் உலகம் அவர்களைப் பகைத்தது...." எனும் சுவிசேஷவாக்கியங்களை எடுத்தாண்டு இன்பமானதமிழிலே மனவருட்சிக்குரிய ஓர்பிரசங்கஞ்செய்து, என்றும்போலக் குருபத்தியுடையராயும், குருத்துவதொண்டுக்குப் பிள்ளைகளை வழிநடத்துவோராயும் அனைவரும் இருந்துவரவேண்டுமென அரிய நன்மதிகள்பகர்ந்து யூபிலிநாயகருக்குச் சோபனங்கூறிநின்றார். பூசைமுடிந்ததும் "தெதேயும்"பாடித் திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதம் அருளப்படலாயிற்று. பின்னர் சுவாமியவர்களையும், மேற்றிராணியாண்டவரையும் நடுவிடமாகக்கொண்டு அங்கு சமுகமானகுருமாரும், உறவினரும் பிரதிமைப்படம் பிடிக்கப்பெற்றார்கள்.

10-30 மணிக்கு யூபிலிநாயகர் பரிமளபுஷ்பாரங்கள் சூட்டப்பெற்று வாத்தியவரிசைகளுடன் ஆடம்பரபவனியாய் மகாராஜாவின் கொலுமண்டபம்போல் கவினுற்றிலங்கிய சென்தெரேசாவின் கலாசாலைமண்டபத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு, அங்கண் உயர்மேடையின்கண் சபாநாயகமாய் எழுந்தருளிய மகாவந். கியோமார் ஆண்டவரின் வலதுபுறமாக, இருபது குருப்பிரசாதிகளையும், மற்றும்பிரமுகர்களையும் இருமருங்கும் நெடுவரிசையாகக்கொண்டு ஆசனத்தமர்ந்ததும், தற்போது இளைப்பாறியிருப்பவரான அச்சுவேலிப் பிரபலஉடையாரின் சிரேஷ்டபுதல்வர் திரு. B. S. சூசைப்பிள்ளை அவர்கள் அனைவரையும் பரிவாகவரவேற்று உபசாரமொழிகள் கூறியபின் அதிவண. S. A. குருசாமி சுவாமியவர்கள் அனுப்பிவைத்த வாழ்த்துச்செய்தியைப் படித்துக்காட்டி, விழாநடவடிக்கைகளை முறைப்படி நடத்தினர்.

முந்தச் சென்தெரேசா கலாசாலை ஆசிரியைகளும், மாணவிகளும் யூபிலிநாயகருக்கு இன்னிசையான வாழ்த்துப்பாமாலை சாற்றினர்கள். செவாலியர் அருளானந்தம்அவர்கள் விசித்திர வேலைப்பாடமைந்த கவர்ச்சிகரமான ஓர்வாழ்த்துப்பத்திரம் படித்துக் கொடுத்தார். விழாநாயகரின் மருகரான திரு. S. M. இம்மனுவேல் ஓர் பணமுடிப்பும், அவரின் சகோதரர் திரு. B. J. தேவசகாயம் 'மிசல்'ஒன்றும், அவர்மருகர் செல்வன் தம்பு ஜெயராசா ஒப்பீஸ்புத்தகங்களும் அன்பளிப்புச்செய்தார்கள். [illegible] சத்தியவேதபா[illegible]யர் A. ஞானப்பிரகாசம் அவர்கள் எழுந்து, அச்சுவேலிப்பதியின் பெருமையையும், அத்துணைமங்காப்புகழை அதற்குஈட்டிவைத்துள்ள பெரியாரையும், அவர்கள் சாதித்துப்போன அரும்பெருங் காரியங்களையும் உணர்ச்சிததும்பச் சிறப்பாக எடுத்துக்காட்டி விழாவைப் பரிமளிக்கச்செய்தனர்.

யூபிலிநாயகர்எழுந்து தமது உறவினரும், ஊரவரும் தமக்குஅளித்த மகத்தான வரவேற்புக்காக மனமுவந்து நன்றித்துதி கூறினர். தாம் அடைந்துள்ள மதித்தற்கரிய குருத்துவபதவியையிட்டே இந்தப்பெரிய உபசரணைகளெல்லாம் என்பதை யாவர்க்கும் அறிவுறுத்தினர். அந்த மகா உன்னதபதவிக்குப் பிள்ளைகளை வழிநடத்தும்படி நன்மதிபுகட்டினர். அனைவர்க்கும் தமது திருக்கரஆசியளித்தனர். அதன்மேல் யூபிலிவிழா ஏற்பாடுகளை விமரிசையாக ஒழுங்குபடுத்திய ஆசிரியர் S. கிறிசோஸ்ரம் எழுந்து, அங்குசமுகமளித்த அனைவர்க்கும் மனமார்ந்த நன்றி கூறியதுடன் வரவேற்புவிழாநிறைவாயிற்று.

உருமத்தின்போது குருமனையிலே மகாவந். கியோமார்ஆண்டவர்தலைமையிலே யூபிலிநாயகருக்கும், 21குருமாருக்கும் சம்பிரமமான ஓர்விருந்துபசரணை நடைபெறலாயிற்று. அவ்வேளை ஆண்டவர்அவர்கள்யூபிலிநாயகரிடத்து விளங்கும் கல்வித்திறமை, காரியதிறமையைவிதந்துபாராட்டி, யாவரும் பேருவகை எய்தும்படியாகப் பெரிதும்மனவருட்சிக்குரியவிதமாகப் பேசிநின்றார். அவரைத்தொடர்ந்து கொழும்புத்துறைத்தாபன அதிபர் வண. S. A. சிங்காரயர் சுவாமியவர்கள்எழுந்து யூபிலிநாயகரையும், அவர் சகோதரரான தமதுபோராசிரியர் பரிமேலர்அருளானந்தம் அவர்களையும் வாயாரப்புகழ்ந்து யாவரும்செவிகுளிர வாசாலத்துடன் பேசியது பேரானந்தம் தருவதாயிற்று. இவ்விழாவை இனிதேகொண்டாடுவான் அயராமுயற்சியுடன் உழைத்த கட்டளைக்குரவர் வண. ஜோண் சிங்காரயர் சுவாமிகளுக்கு எனது நன்றித்துதி உரித்தாகுக!

— நிருபர்

## சின்னமடுச் செபமாலைமாதா திருப்பதி

### மழைபெய்யும்படியாக தபமுயற்சிகளோடும் செபவேண்டுதல்களோடும்

# நடைபெறும் சுற்றுப்பிரகாரம்

மகாவந். மேற்றிராணியாண்டவரது ஏவுதலின்பேரிலே லைடன்தீவுக் கத்தோலிக்கமக்கள் இந்த ஆடிமாசம் 28-ந்திகதி சனிக்கிழமைபிற்பகல் 4-30 மணிக்குத் தத்தங்கோவில்களில் ஒன்றுகூடி அறையுண்ட திருச்சுரூபங்களை ஏந்திக்கொண்டும், செபமாலைசெபித்துக்கொண்டும் சுற்றுப்பிரகாரமாய்ச் சின்னமடுச் செபமாலைமாதா திருப்பதிசென்று அங்கே மூன்றுமணிநேரம் செபமுதலாம் பத்திமுயற்சிகள் நடத்துவார்கள்.

ஆடிமாசம் 26-ந்திகதி வியாழக்கிழமைமுதல் 28-ந்திகதி சனிக்கிழமைஈறாக மூன்றுதினங்களையும் இத்தீவிலுள்ள கத்தோலிக்கமக்கள் உபவாசமுதலாம் தபமுயற்சிகளிலும், செபத்திலும், சிலுவைப்பாதைப் பத்திமுயற்சியிலும் செலவிடுவார்கள். இந்த நாட்களிலே அவர்கள் நல்லபாவசங்கீர்த்தனஞ் செய்து, திவ்வியநற்கருணை பெறக்கடவார்கள். 12 வயதுக்குமேற்பட்டவர்கள் 27-ந்திகதி வெள்ளிக்கிழமை உபவாசமிருப்பார்கள்.

சின்னமடுப்பதியிலே மூன்றுமணித்தியாலப் பத்திமுயற்சிகளாவன:—

1. காரணிக்கங்களின் விளக்கத்தோடு 153 மணிச்செபமாலை.
2. கோவிலைச்சுற்றித் திருச்சிலுவைப்பாதைப் பத்திமுயற்சி.
3. தேவநற்கருணைச் சந்நிதியிலே திருமணித்தியாலம்.
4. சற்பிரசாத ஆசீர்வாதம்.
5. செபமாலைமாதாவின் திருச்சுரூப எழுந்தேற்றம்.

ஊர்காவற்றுறை, நாரந்தனை, கரம்பன்
விசாரணைப்பங்குகளின்
கட்டளைக்குரவர்கள்.

## அப் துல்லா மன்னர் கொலை

பலஸ்தீனாவிலே யோர்தான் நாட்டின் அரசராயிருந்து அதனைப் பிரஸ்தாபமாகஆட்சிசெய்துள்ள அப்துல்லா மன்னர் சென்ற 20-ந்திகதி வெள்ளிக்கிழமை பழைய ஜெருசலேம்நகரில் சதிமானமாகச் சுட்டுக்கொல்லப்பட்டாரெனப் பரந்தசெய்தியானது உலகமுழுவதும் பெருந்திகிலை உண்டுபண்ணுவதாயிற்று. மத்திய கிழக்கு நாடுகளின் அரசர்களுள் அதிகசாதுர்யமும், வசீகரமும்வாய்ந்த அப்துல்லா மன்னர் திறான்ஸ்யோர்தான்என முன்னர் அறியப்பெற்றிருந்ததும், ஒன்பதாயிரம்சதுரமைல்விஸ்தீரணமுடையதும் மூன்றரைலட்சம் சனங்களை அடக்கியதுமான யோர்தான் நாட்டினை 28 வருடகாலம் ஆட்சிசெய்துவந்திருக்கிறார். பிரித்தானிய பாதுகாப்பின்கீழ் எமீராயும், 1946-ம் ஆண்டுமுதல் அதன்சுதந்திரமன்னராயும் இருந்துவந்த இவர் 1950-ம் ஆண்டு அராபிய பலஸ்தீனாவின் சிலபகுதிகளையுஞ்சேர்த்துத் தமது நாட்டினை இருமடங்கு விஸ்தீரணமுடையதாக ஆக்கிக்கொண்டார். இவர் அன்று பழைய ஜெருசலேமிலுள்ள எல்அக்சா பள்ளிவாசலிலே பகற்தொழுகைக்குச் சென்றிருந்தபோது அதன் பிரதானவாயிலில் பதிவிருந்த முஸ்தபா ஆஷ்ஹூ எனும் சதிகாரன் ஒருவனால் சுட்டுக்கொல்லப்பட்டனர். 1948-ம் ஆண்டுமுதல் மத்திய கிழக்குநாடுகளிலே இருஅரசர்களும், ஓர் அரசாங்கதலைவரும், மற்றும் அரசியற்தலைவர்களுமாகப் பதினன்குபேர் இவ்விதம் சதிமானமாகக் கொலைசெய்யப்பட்டுள்ளார்கள். பலஸ்தீன் தகராறு, பார்சீக எண்ணெய்த் தகராறு, அராபிய—எகிப்திய நாடுகளின் தகராறு ஆதியவற்றால் ஏலவே கொந்தளித்துக்கொண்டிருக்கும் மத்திய கிழக்குநாடுகளிலே அப்துல்லா மன்னர் கொலைசெய்யப்பட்டதிலிருந்து ஏற்பட்டுள்ள கலவரங்கள் எவ்வாறு முடியுமோவென்று உலக சமாதானத்துக்காக உழைத்துவரும் சுதந்திர நாடுகள் ஏக்கங்கொள்வது ஆச்சரியமன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க செய்திகள்

*United States Information Service, COLOMBO.*

## கிறமீலின் கெடுபிடி யுத்தம்

—வாஷிங்ரன்

"சுதந்திர உலகைப் பாழாக்கும் முயற்சியிலே சோவியற்அரசு நான்கு முனைகளில் கெடுபிடி யுத்தத்தை நடத்துகிறது. இந்தச்சவாலை ஏற்றுக்கொள்வது சுதந்திரஉலகின் பொறுப்பாகும். கெடுபிடி யுத்தத்தில் நாம்வெற்றிகொள்ளமுடியும். ஒரு பத்து ஆண்டுகளுள் சமாதானம்நிரம்பிய உலகுக்குரிய நிலையான சூழல்களைச் சுதந்திர உலக மக்கள் நிறுவமுடியுமென நம்புகிறேன்" என்று அமெரிக்க அரசாங்க பொருளாதார கூட்டுறவுக்காரியாலய மாஜி நிர்வாகியான திரு. போல் ஜி. ஹாப்மன் அவர்கள் அமெரிக்க சனப்பிரதிநிதிகள்சபை வெளிநாட்டு விவகார கம்மிற்றிக்கூட்டத்தில் கூறியிருக்கிறார். மேலும் அவர் தெரிவித்ததாவது: இராணுவம், இராஜீயம், பிரசாரம், பொருளாதாரம்ஆகிய நான்கு முனைகளில் கம்யூனிஸ்த கெடுபிடியுத்தம் நடக்கிறது. பொருளாதாரப் போர்முனையில் சிறப்புமிக்க வெற்றி ஈட்டித்தந்த சாதனம் மாஷல்திட்டமே. பசியினால் எதற்கும் துணிந்த நிலையிலுள்ள மக்களுக்கு ஆசைவார்த்தைகளை அள்ளிச்சொரிதல் கம்யூனிஸ்தர்களின் வழமையான தந்திரங்களில் ஒன்றாகும். 'சர்வகஷ்ட நிவாரணி' போலத்தோன்றும் எந்தவாக்குறுதியையும் அந்தமக்கள்ஏற்க உடன்படுகின்றனர். அது ஒருபுறமிருக்க, அமெரிக்காவைப் பொறுத்தவரையில், வளப்படாத நாட்டுமக்களைச் சமபங்காளிகளாகமதித்தே உதவித்திட்டத்தைச் செயற்படுத்தவேண்டும். எல்லாவற்றிலும் 'உயர்வானதேசம்' என்ற மிதப்பானஎண்ணம் நமக்குக்கூடாது."

## அமைதியின்மைத் தாண்டவம்

—நியூயோக்

"ஐரோப்பாவிலுள்ள சோவியற் சார்புநாடுகளிலே கம்யூனிஸ்தஆட்சியின்கீழ் பொதுஅமைதியின்மை தாண்டவமாடுகிறது. குறிப்பாக, இந்தக் கிளர்ச்சி போலாந்திலும், செக்கோசிலவாகியாவிலும் அதிகம் காணப்படுகிறது."—இவ்வாறு "நியூயோக் ரைம்ஸ்" பத்திரிகையின் பிறங்போட்நகர (ஜேர்மனி) நிருபர் திரு. மிடில்ரன் எழுதுகிறார். கைத்தொழில் நகரங்களிலுள்ள தொழிலாளிகள் வேண்டுமென்றே உற்பத்தியின் தரத்தைக் குறைத்துவருகின்றனர். தொழிற்துறையிலுள்ள தொழிலாளர் வேண்டுமென்றே வேலையில் அசமந்தமாக இருக்கின்றனர். நாட்டுப்புறங்களிலுள்ள கமக்காரர் முதலானோரோ அரசாங்கத்துக்கு வரிப்பணத்திற்குப் பதிலாகச் செலுத்தும் விளைச்சலைப் பின்னுக்கு இழுத்துக்கொள்கின்றனர். இதனைக் கம்யூனிஸ்த எதிர்ப்புக் கிளர்ச்சியாகவும், அமைதியின்மையாகவுமே கருதமுடியும். இந்தக்கிளர்ச்சி நிலைமைக்கு முக்கியமாக இருகாரணங்கள் உள்ளன. முதலாவதாக, தாங்கள் சிரம்ப்பட்டு உற்பத்தி செய்யும் பண்டங்கள் சொந்தநாட்டை விட்டுச் சோவியற் ரூஷியாவுக்கும், பிறசார்பு நாடுகளுக்கும் அனுப்பப்படுவது. தானிய விளைச்சலுக்கும் அதே கதிதான் ஏற்படுவது. ஏன் அப்படி? என்றே தொழிலாளர் குமுறுகின்றனர். அடுத்ததாக, அந்தநாடுகளிலே அற்ப சொற்ப சுயமரியாதையோடும், சுயேச்சைஉணர்ச்சியோடும் நடந்துகொண்ட கம்யூனிஸ்த தலைவர்களை அகற்றிவிட்டுத் தங்களுக்கு வேண்டிய தலையாட்டிகளை மேலிடமாகிய மஸ்கோ அதிகாரபதவிகளில்அமர்த்தியது. இந்த விதமாகப் பிறநாடுகளில் மஸ்கோ தலையிடுவதை—அதுவும் உள்நாட்டுப் பொருளாதாரம் சின்னபின்னமாகும்படியாகத் தலையிடுவதைச் சனங்கள் ஆட்சேபிக்கிறார்கள்.

## செம்படையின் தட்டுப்பாடு

ஐ. நா. ஸ்தலம், கோறியா

போரிலே காயப்பட்ட யுத்தவீரர்களுக்குச் சிகிச்சை செய்யத்தக்க ஏற்பாடுகளும், மருந்துச் சாமான்களும், போர்அரங்கத்திற்கு அருகாமையில் கோறியாவின் கம்யூனிஸ்த இராணுவத்தார் கொண்டிருக்கவில்லை இத்தகவலை யுத்தகைதிகளான கம்யூனிஸ்த போர்வீரர்கள் தம்மிடம் கூறியதாகக் கோறிய போர்முகப்பில்உள்ள இந்திய மருத்துவசகாய படையதிகாரியான கப்ரின் ஏ. கே. பாஸு தெரிவிக்கிறார். காயமடைந்த கம்யூனிஸ்த போர்வீரர்கள் கவனிப்பாற்றுப் போகின்றனர் என்றும், யாதொருவிதமான சிகிச்சைஏற்பாடும் அவர்களுக்குக் கிடையாது என்றும் இந்தக்கம்யூனிஸ்த படைவீரர்கள்சொல்லுகிறார்கள். இவர்களுக்கு ஐ. நா. ஆதரவிலுள்ள மருந்துச்சகாயப்படைகள் வேண்டியஉதவிகளை அளித்துச் சிறந்தமருந்துகளும், நவீனமுறைப்படி கவனமும் கிடைக்கச்செய்து வருகின்றனஎன்று கப்ரின் பாஸு கூறுகிறார்.

## 40 நாடுகளின் இணக்கம்

—லேக்சக்ஸஸ்

கோறியயுத்த ஆக்கிரமிப்பாளரான கம்யூனிஸ்த சீனவுக்கும், வடகோறியாவுக்கும் யுத்தகருவிகளுக்கு வேண்டிய மூலப்பண்டங்கள் ஏற்றுமதி செய்வதை ஐ. நா. ஸ்தாபனம் தடைப்படுத்தியுள்ளது. இந்த ஏற்பாட்டைத் தூரகிழக்குநாடுகள் 10 உள்ளிட்ட 40 நாடுகள் ஒப்புக்கொண்டுள்ளன என்று ஐ. நா. காரியாலயம் அறிவிக்கிறது. தடைக்குஇலக்கான பண்டங்கள் தங்களிடம் மேலதிகமாக இல்லைஎனச் சொல்லிக் கொள்கையளவில் ஐ. நா. ஏற்பாட்டை ஒப்புக்கொள்வதாக மற்றும் இருநாடுகள் பதிலளித்துள்ளன. சோவியற்அரசும், அதன் சார்புநாடுகளும் இந்த ஏற்பாட்டைச் "சட்டவிரோதமான" தென்றுசொல்லி ஏற்க மறுத்துவிட்டன.

—வாஷிங்ரன்

யப்பானின்எதிர்காலத்தை நிர்ணயிக்கும் சமாதான உடன்படிக்கை அம்சங்களை அமெரிக்கவரசு சென்றவாரம் வெளியிட்டுள்ளது. சமாதான உடன்பாட்டுச் சரித்திரத்திலேயே இது ஒப்புவமையற்றது என்று சொல்வது பொருத்தமாகுமாம். இந்தச் சமாதான ஒப்பந்தத்தின் அடிப்படைக் குறிக்கோள், யப்பானை ஜனநாயககுடும்பத்தில் சுதந்திர உறுப்பாகச் சேர்த்துக்கொள்வதுதான். சாதாரணமாக, தோற்றுப் போனவன் என்றால், அவன் மறுபடி தலைதூக்கமுடியாதபடி என்ன என்ன முட்டுக்கட்டைகள் உண்டோ, அவ்வளவையும்சுமத்தித் திணறஅடிப்பார்கள். இது உலகவழக்கம். ஆனால், இந்த வழக்கத்திற்கு நேர்மாறாக இந்தச்சமாதான உடன்படிக்கை அமைந்திருப்பது குறிப்பிட்டுச் சொல்லத்தக்கதாகும். தோற்றநாட்டைத் தண்டிக்கும் அம்சங்கள் இதில் இல்லை. யுத்தநஷ்ட ஈட்டுக்காக யப்பானைக் கசக்கிப்பிழியும் கொடுமை இதில் இல்லை. யப்பான்மீது விசேட சலுகைகள் கோரப்படவில்லை. நவயுகத்தில் தண்டனை நிபந்தனைகள் போடுவதினால் சமாதான லட்சியமே முறியடிக்கப்பட்டு விடுகிறதுஎன்பது அனுபவவாயிலாகக் கண்டறியக்கூடிய உண்மையாயிருக்கிறது. எனவே, புதுக்கொள்கைகளின்பேரில் ஸ்ரீ. டல்லஸ் இந்த ஒப்பந்தத்தைத் தயாரித்துள்ளார். வருகிற புரட்டாசி மாதத்திலே ஐ. நா. ஸ்தாபனத்தின் பிறப்பிடமான சான் பிரான்சிஸ்கோ நகரினில் 52 தேசங்கள் இந்த உடன்படிக்கையை அங்கீகரித்துக் கைச்சாத்திடும். இந்த மகாநாட்டிற்கு ரூஷியா அழைக்கப்பட்டிருக்கிறது. அது வந்து கையெழுத்துப் போடாவிட்டாலும், பெரும்பான்மைத் தீர்ப்புப்பிரகாரம் யப்பானிய சமாதான ஒப்பந்தம் நிறைவேறிவிடும். இந்தமகாநாட்டில் "வீற்றோ" (ரத்து அதிகாரம்) இல்லை. இந்த உடன்படிக்கையிலே எந்தச்சீனா கையொப்பம் இடுவது என்றசிரமம், எந்தச்சீனாவையும் இப்போது கூப்பிடுவதில்லை என்ற ஏற்பாட்டினால் தவிர்க்கப்பட்டிருக்கிறது. அது யப்பான் பின்னிட்டுத் தீர்மானிக்க வேண்டிய விஷயமாக்கப்பட்டுள்ளது.

## தலைவர்கள் வெளியிடவில்லை

—வாஷிரன்

சோவியற் மக்கள்உட்பட உலகோர் யாவர்பாலும் அமெரிக்கமக்கள் நட்புணர்ச்சி கொண்டுள்ளனர்; மனிதனின் மாண்பு உயரவேண்டும், மக்கள் குலம் விடுதலைபெற்றுத் தலைநிமிர்ந்து வாழவேண்டும் என்பதே அமெரிக்க மக்களின் உள்ளக்கிடக்கையாகும். இதை மீண்டும் உறுதிசெய்து அமெரிக்ககாங்கிரஸ் இரு சபைகளும் (செனற்சபை சனப்பிரதிநிதிகள்சபை) தீர்மானம் நிறைவேற்றியுள்ளன. இந்தத் தீர்மானத்தை ரூஷியமக்களுக்குத் தெரிவிக்குமபடி சோவியற் ஜனாதிபதிக்கு அமெரிக்கஜனாதிபதி ட்றூமன் அவர்கள் விசேடசெய்திமூலம் கோரிக்கை விடுத்திருந்தார். ஆனால், இந்தக் கோரிக்கைக்கு நாளதுவரை சோவியற் தலைவர்கள் செவிசாய்த்ததாகத் தெரியவில்லை. அமெரிக்கமக்களின் நட்புணர்ச்சியைச் சோவியற் மக்களின் தலைவர்கள் அவர்களுக்கு எடுத்துக்கூறவில்லை. இப்படி எத்தனைநாள் அவர்கள் மௌனம்சாதிக்கின்றனரோ, அதுவரைக்கும் "இன்றும் கூறவில்லை" என்று "அமெரிக்ககுரல்" சுட்டிக்காட்டத்திட்டமிட்டுள்ளது. அமெரிக்க மக்களின் நட்புஉணர்ச்சியை விளக்கும் தீர்மானம், சோவியற் பத்திரிகை ஒன்றிலாவது இதுவரை வெளிவரவில்லை. சோவியற் வானொலியிலும் அதைப்பற்றிய பேச்சு இல்லை. ஸ்ராலினிஸ்ற் செய்திவிமர்சகர் ஒருவரேனும் இதைப் படித்துச்சொல்ல முன்வரவில்லை. அமெரிக்க மக்களின் நட்புஉணர்ச்சியைச் சோவியற்மக்கள்புரிந்துகொண்டு விட்டார்களாகில் உலகில் யுத்தமேது? சச்சரவேது? என்பதை ஜனாதிபதி ட்றூமன் அவர்கள் காங்கிரஸ் தீர்மானத்துடன் சேர்த்தனுப்பிய செய்தியில் அழகாகச் சொல்லியிருந்தார்.

---


பெரியகட்டு

## அர்ச். அந்தோனியார் திருநாள்



**5—8—51**

பெரியகட்டில் கோயில்கொண்டு அருள்புரியும் கோடிஅற்புதவரத்தராகிய அர்ச். அந்தோனியாரின் திருநாள் இம்மாதம் 2-ந் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, 5-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை சுற்றுப்பிரகாரத்துடன் முடிவுபெறும்.

யாத்திரிகளுடைய வசதிக்காக இராறெயின்களைத்தவிர
மற்றெல்லாப் பகல் றெயின்களும்
ஆவணி 1-ந் திகதி தொடக்கம் 6-ந் திகதி மட்டும்
பெரியகட்டில் நிற்பாட்டப்படும்.

கவனிப்பு: மெழுகுதிரிகளும், மற்றும் பத்திக்குரிய சாமான்களும் கட்டளைச்சுவாமியாரால் விற்கப்படும்.

கட்டளைக்தரவர்.


---

—புதிதாக அர்ச்சியசிஷ்டபட்டம் அருளப்பெற்ற அர்ச். எமிலியே டே வியாலர் அம்மாளின் திருநாளாக ஆவணிமாதம் 24-ந் திகதியையும், அர்ச். மரியா தொமினிக்கா மசாறெல்லா அம்மாளின் திருநாளாக வைகாசி மாதம் 14-ந் திகதியையும் பாப்பாசர் தெரிவு செய்திருக்கின்றார்.

## அர்ச். உத்தரியமாதா திருநாள்

அல்லைப்பிட்டியிலே கோவில்கொண்டிருக்கும் பரிசுத்த கார்மேல் மாதா திருநாள் இம்மதி 16-ந்தேதி திங்கட்கிழமை அதிசிறப்பாகக் கொண்டாடப்பட்டது. பலவர்ணத் துவசங்களாலும், அழகியமலர்களாலும் கோவில் அலங்கரிக்கப் பெற்றிருக்க, நவதினவிழாக்கள் மிகவருட்சியாக நடந்தேறின. திருநாளுக்கு முதனாள்இரவு கோவிலின் உள்ளும்புறமும் மின்சாரதீபங்கள் பிரபைவீசிநிற்க, தேவாராதனைக் கீதங்களையும், செபங்களையும் ஒலிபரப்பி இசைபரப்பியது. வண. பி. ஈ. அல்பிறெட் சுவாமியவர்கள் தேவதாயாரின் மகிமையைவிளக்கி அரியதோர் பிரசங்கஞ்செய்தனர். அதன் மேல் மூன்று குருப்பிரசாதிகளால் வேஸ்பர் பாடிமுடிந்ததும் திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதம் அருளப்படலாயிற்று.

திருநாளன்று காலை திவ்வியபூசையின்போது வண. அன்ரன் இராசகாரியர் சுவாமியவர்கள் தேவதாயார் பாவிகளின் தஞ்சம் என்பதை விரித்துக்காட்டிச் செய்தபிரசங்கம் பெரிதும்மனவருட்சிக் குரியதாயிற்று. பூசைமுடிந்ததும் கார்மேல்மாதாவின் திருச்சுரூபமும், அர்ச். யுவானியார் திருச்சுரூபமும் இருசரோலைக்கூடுகளில் எழுந்தருளச் சுற்றுப்பிரகாரம் நடந்து, அதன் முடிவிலே புதிதாக வேலைநடந்துகொண்டிருக்கும் முகப்பிற்கெனச் சித்தமாயிருந்த கார்மேல் மாதாவின் சுரூபம் கட்டளைக்குரவர் வண. எல். யோசெப் சுவாமிடவர்களால் ஆசீர்வதித்து, மக்கள் அனைவரையும் மாதாவுக்குச் செபமூலம் ஒப்புக்கொடுத்து, சுரூபத்தை அதற்கெனத்தயாராயிருந்த இருப்பிடத்தில் ஸ்தாபித்தனர். அந்நேரம் அவர் முகமலர்ந்து அனைவர்க்கும் நன்றிகூறி, முகப்புவேலையைத் தொடக்கத் தமக்கு உற்சாகமளித்து முதன்முதலாக ஆயிரம்ரூபா உபகரித்த திரு. ஆசீர்வாதம் வரப்பிரகாசத்திற்கும், வேலையைஊக்கமாக நடப்பித்துவரும் போஸ்ற்மாஸ்றர் ஜே. பி. பொன்னுத்துரை மூப்பருக்கும் விசேஷநன்றியும், மற்றும் சரீரஉதவிசெய்த உபகாரிகளுக்கும், சைவநண்பர்களுக்கும் வாழ்த்துங்கூறித் திருச்சுரூப ஆசீர்வாதம் ஈந்தார்.

சைவநண்பர்கள் சார்பாகச் சிலஅன்பர்கள் மாதாவுக்குத் தங்கள் வணக்கத்தைக் காண்பிக்குமாறு விழாவிற்குச் சமுகந்தந்து குரவர்க்கும், மூப்பருக்கும், முதல் உபகாரிக்கும் புஷ்பாரங்கள்சூட்டி, நாதசுரவாத்தியங்கொண்டு மாதாவை மகிமைப்படுத்தித் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டார்கள். ஈற்றில், அன்னதானத்துடன் திருநாள் நிறைவாயிற்று.

—நிருபர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தூது

தமிழ்இலக்கியக் கழகத்தலைவர் அறிஞர் தனிநாயகஅடிகள், *M. A., M. Litt., S. T. D.*

தமிழ்மக்களுட்சிலரும் தமிழ்மக்கள் அல்லாதார்சிலரும் தத்தம்இயல்பிற்கு ஒவ்வும்வகையிலெல்லாம் தமிழிற்காக அரும்பணியாற்றி வருகின்றனர். வேற்றுமொழிகளுடனும், நாடுகளுடனும், மக்களுடனும் தொடர்புடைய தமிழர் தம்மொழி, நாடு, இனம இவைமூன்றின் மாண்பை ஒப்பிட்டு அறிந்து அதனைப்பிறர்க்குக் கூற விரும்புவதில் யாதும்வியப்பின்று.

இத்தகையதொண்டில் முதன்முதல் ஈடுபட்டவர்களுள் அந்தணரும் குறிஞ்சிப்பாட்டினை இயற்றி ஐந்திணை இலக்கணம் ஆரியமன்னர்க்குப் புகட்டியவருமாகிய கபிலர் குறிப்பிடத்தக்கவராவர். நமகாலத்தில் வேற்றுநாடுகளுக்கு ஒருவாறு தமிழின்பெருமையைக் காட்டியவர் ஈழநாட்டவரும், இந்தியக்கலைகளில் இணையற்றதேர்ச்சி பெற்றவருமாகிய ஆனந்தக் குமாரசுவாமியாவர். இவரிருவருடைய காலத்துக்குள் இந்நோக்கத்துடன் பலர் உழைத்திருக்கின்றனர். இப்பலருடைய அறிவும், ஆற்றலும் படைத்தேனல்லேனாயினும், உலகச்செலவுசெய்து தமிழ்க்கலைத் தூதுநிகழ்த்த எனக்கும் வாய்ப்பு நேரிட்டதென்று பெரிதும் உவந்து அத்தொண்டினை மணமற்ற சிறுமலராங்கு தமிழன்னையின் துணையடியில் வைக்கின்றேன்.

நாட்டைவிட்டுப் பெயர்ந்து ஏறக்குறைய ஈராண்டுகளாகியபின் தமிழ்த்திருநாட்டை மீண்டும் என்கண்கள் பார்த்தன. இவ் ஈராண்டுகளில் யான் மலாயா, சீனம், யப்பான், வட அமெரிக்கா, தென்அமெரிக்கா, நடுஅபிரிக்கா, வட அபிரிக்கா, இத்தாலி, கிறீஸ், பலத்தீனு, எகிப்து இந்நாடுகளைக் கண்டுவந்தேன்.

தமிழைப்பொறுத்தவரை யானடைந்த பெரும்வியப்பு தமிழும், தமிழரும் உலகிற்பரவியிருக்கும் வகைகண்டு ஏற்பட்டதேயாம். பர்மாவில் தமிழ்மொழிக்குச் செல்வாக்குண்டு. நடுஅமெரிக்காவின் தீவுகளாகிய திரிநாடு, ஜமேக்கா, அத்திலாந்திக் தீவுகளாகிய மார்த்தீனிக், அபிரிக்காவின் பலபிரிவுகள் இன்னோன்ன இடங்களுக்குச் சென்ற தமிழர் பெருஞ்சிறப்புடன் வாழ்ந்துவருகின்றனர். ஆயினும் மலாயாவிற்குச் சென்றபொழுது யான் அடைந்ததுபோன்றவியப்பு வேறு எவ்விடத்திலும் அடையவில்லை. ஆங்குள்ள இந்தியர்களில் தமிழரே பெரும்பகுதியினர். அங்குத்தமிழில் நாட்செய்தித்தாள்கள் நான்கு ஐந்து வெளியிடப்படுகின்றன. சிங்கப்பூர், கோலாலம்பூர்முதலிய பேரூர்களின் வானொலிநிலயங்கள் தமிழில் நாள்தோறும் ஒலிபரப்புகின்றன என்றறிந்து பெரிதும்மகிழ்ந்தேன். மேலும் யான் அங்குச் சென்றிருந்தக்கால் மலாயாவின் பல்கலைக் கழகம்ஒன்றை நிறுவத் திட்டங்கள்வகுத்து வந்தனர். அப் பல்கலைக்கழகத்தில் தமிழிற்கும் ஒருபேராசிரியக்கட்டில் நிறுவவேண்டுமென்று இலங்கைத்தமிழரும், இந்தியத்தமிழரும் முயன்றுவந்தது களிப்பிற்குக் காரணமாயிற்று.

தமிழ்ஒலிகள் ஊர்ஊராக உரையாடுதலில் வேறுபடுவது குறிக்கற்பாலது. மலையாளநாட்டின் எல்லையிலிருப்போர் மலையாளம்பேசுவதுபோல் தமிழ்ப்பேசுவர். சிங்களநாட்டிலிருப்பவர் சிங்களத்தைப்போல் தமிழைஉரைப்பர். இவ்வாறே மலாயாவில் சீனமொழியைப்போலும், அமெரிக்கத்தீவுகளில் ஆங்கிலத்தைப்போலும் தமிழை உரைத்துவருகின்றனர்.

தமிழன் தன்மொழியைக் காதலிப்பதுபோல் வேறெவரும் தம்மொழியைக் காதலிப்பதைபோ, தமிழ்ப்புலவர் தம்மொழியைப் போற்றுவதுபோல் வேறெவ்விலக்கியத்திலும் யாரேனும் தம்மொழியைப் போற்றுவதையோ கண்டிலேன். சேக்கிழாரை விரித்துப் பார்மின். தமிழ் எனும் சொல்லைத் தமசெய்யுளில் அமைக்க வேண்டுமெனின் அதற்குஅடையில்லாமல எழுதப்பின்வாங்குவர். 'செந்தமிழ்,' 'இன்றமிழ்,' 'வண்டமிழ்,' 'தண்டமிழ்,' 'அருந்தமிழ்,' 'செழுந்தமிழ்.' 'தீந்தமிழ்,' 'உயர்தமிழ்,' 'கோதில்தமிழ்,' 'தேன்பொழியும் செந்தமிழ்' என்றெல்லாம் யாழினும் இனிதிசைப்பர். இனி, தேவாரங்களைப்பாடினோர் எனும் பொருளில் 'தமிழ்பாடியறைந்தார்,' 'தமிழ்மாலைகள் சாற்றினோர்' என்றுபுலவர்கூறுவதை யாம் நினைந்துநினைந்து இன்புறும் கடப்பாடுடையேம். மேலும், திருமூலர் "என்னை நன்றாக இறைவன் படைத்தனன், தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே" என்று கூறுவதுபோலெல்லாம் பிறமொழிப்புலவர் தம்மொழியைப் போற்றிக்கூறியதாகத் தெரியவில்லை. தமிழரின் இத்தமிழ்ப்பற்றுத்தான் மலாயாவின் தமிழர் என் விரிவுரைகளைக்கேட்க நெடுந்தொலைவிலிருந்து வருவதற்கும், யான்செய்த சிறுதொண்டைப் பெரிதாய்ப்போற்றுதற்கும் காரணமாக இருந்தது. உலகிலிருக்கும் தமிழரனைவரும் தம்மொழிக்குத் தொண்டாற்ற ஒன்றுகூடுவரேல் தமிழ்முரசு உலகெங்கும் பிறங்கிநிற்கும் என்பதில் ஐயமில்லை.

வேற்றுநாடுகளிற் குடியேறியிருக்கும் தமிழர் தமிழை ஒருவாறுமறப்பதற்கு அவர்கள்சூழ்நிலை காரணமாக இருப்பதால் அந்நாடுகளின்மொழிகள் வாயிலாகவும் தமிழின்புகழைப் பரப்புவது நம்கடமையாகும். வேற்றுநாடுகளுக்குத் தமிழ்நாட்டிலிருந்து கல்விப்பொருட்டோ, வணிகம்பொருட்டோ, அரசியற்பொருட்டோ செல்லும் தமிழரனைவரும் தமிழ்வரலாற்றையும், தமிழ்இலக்கியங்களையும் நன்குணர்ந்து செல்வாராயின் அவரும் தமிழ்க்கலைத்தூதைப் பெரிதும் நிகழ்த்துதற்கு வழிகளைக்காண்பர். சென்ற நூறு ஆண்டுகளில் மேல்நாட்டார்சிலர் தமிழைப்பற்றி ஒருவாறு அறிந்திருக்கின்றனர். ஆயினும் பண்டைப்பண்பு படைத்த சீனம், யப்பான்முதலிய நாடுகளிலும், தமிழ்க்கலைகளும் பண்பாடும் பரவியிருந்த சாவகம், புட்பகம்போன்ற நாடுகளிலும் தமிழினதுபுகழை எடுத்துக்கூறும்தொண்டை ஆற்றுவாரிலர். சென்றபலஆண்டுகளாக மேற்றிசைநோக்கிய நம்எண்ணங்களைச் செலுத்திவந்திருக்கின்றனம். ஆசியப்பரப்பில் நடுநாட்டவராயிருக்கும் தமிழர் நாற்றிசையிலும் தம் எண்ணங்களைச் செலுத்தித் தமிழ்த்தொண்டாற்றுவது இன்றியமையாதது.

யப்பான்நாட்டில் பல பல்கலைக்கழகங்கள் இருக்கின்றன. அக்கழகங்களில் வடமொழிப்பயிற்சி சிறிதளவிலேனும் உளது. ஆயின் தமிழ்ப்பயிற்சியோ அறவேஇல்லை. "திராவிடக் கலைகளைப்பற்றியும், பண்பாட்டைப் பற்றியும் யாம்அறிய விரும்புகின்றனம். யப்பானியமொழியில் அவற்றைப்பற்றி அறியத்தக்க நூல்கள் எமக்குக்கிடைத்தில. ஆங்கிலத்திலும் மிகக்குறைவே" என்று யப்பானில் கீழ்த்திசைக்கலைமொழியாசிரியரொருவர் எனக்குக் கூறினர். ஆயினும் பலநூல்நிலையங்களில் போப்ஐயருடைய (Hand Book of Tamil Grammar) என்னும் துணைநூலினைக் கண்டேன்.

(தொடரும்)

## அர்ச். அன்னம்மாள்கோவில் ஆனையிறவு

ஆனையிறவிலே கோவில்கொண்டிருக்கும் அர்ச். அன்னம்மாள் திருநாள் இம்மாதம் 29-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்படும். திருநாளுக்கு ஆயத்தமான நவதினவிழாக்கள் சென்ற 20-ந்திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றன.

### நிகழ்ச்சிகள்

24-ந் திகதிமுதல் 27-ந் திகதிவரையில்—மாலை 7-30 மணிக்குச் செபமாலை' பிரார்த்தனை, சற்பிரசாத ஆசீர்வாதம்.

28-ந் திகதி—றெயின்வழியாகப் (தபால் றெயின்) பிரயாணஞ் செய்யவிருப்பவர்களின் வசதியைக்கோரி மாலை 9 மணிக்கு வேஸ்பரும், சற்பிரசாத ஆசீர்வாதமும்.

29-ந் திகதி—பாடற்பூசை, திருச்சுரூப சுற்றுப்பிரகாரம், விருந்து.

**சந்தானுள்நாயகி ஆனையிறவில் எழுந்தருளி யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கும், எஞ்சிய இலங்கைப்பெருநாட்டுக்கும் பாதுகாவலாளியாய் இருந்துவருகின்றாள்.**

## தோட்டவேளி வேதசாட்சிகள் கோவில் திருவிழா

மன்னார்ப்பகுதிப் பாதசாகியமக்கட்கு ஆடிமாதம் 12-ந்திகதி மங்களகரமான ஓர் திருநாளாகும். அன்றுதினமே அவர்கள் 400 ஆண்டுகளுக்குமுன் தாங்கள் கத்தோலிக்க திருமறையில் சேர்ந்ததையும், தங்களை அத்திருமறையில் சேர்ப்பித்த தங்கள் பாதுகாவலரான அர்ச். சவேரியாமாமுனியையும்குறிக்கோளாகக்கொண்ட தினமாகும். இத்தினத்தை 1931-ம் ஆண்டு தொடக்கம் இதுகாலவரை ஆடம்பரவைபவங்களுடன் கொண்டாடிவந்த மன்னார்ப்பகுதி ஒன்பதூர்ப் பாதகுலமக்களும் வழமைபோல் இவ்வருடமும் வேதசாட்சிகளின் தலமாகிய தோட்டவெளித்தேவாலயத்தில்பத்திச் சிறப்புடன் அதைக் கொண்டாடி முடித்தனர்.

திருநாளுக்குஆயத்தமாய்ப்பன்னூற்றுக் கணக்கான பாதகுலமக்களும், குருமார் ஐவரும் சமுகந்தந்தனர். செபமாலை பிரார்த்தனையின்பின் இப்பதித்தலைவர் வண. லெபோங் சுவாமியவர்கள் வேதசாட்சிகளின் தலத்தையும், அதன்புனிதநிலையையும், அதைப் பாதுகாக்கவேண்டிய முறையையும் சரித்திரசம்பவங்களுடன் தொகுத்துக் கவர்ச்சிக்குரிய ஓர் பிரசங்கம் செய்தனர். தொடர்ந்து வங்காலைக் கட்டளைக் குரவர் வண. எஸ். கோமஸ்சுவாமியவர்கள் குரவர் இருவரும், பேசாலை–வங்காலைப் பாடகரும் துணைபுரிய மாலை ஆராதனைபாடி முடித்தனர்.

திருநாளன்று காலை மேலும் வந்து கூடிய நூற்றுக்கணக்கான யாத்திரிகர் சமுகத்தில் இப்பதித்தலைவர் முன்போல இருகுரவர் துணைபுரியப் பாடற்பூசை நிறைவேற்றி முன்சொன்ன குறிப்புகளைக்கொண்ட பிரசங்கமும், செய்தனர். பூசைமுடிவில் பாதுகாவலரின் திருச்சுரூப சுற்றுப்பிரகாரம் ஆலயத்தைச்சுற்றிநடந்து ஆசீர்வாதம் அருளப்பட்டது. வேதசாட்சிகள் புதைக்கப்பட்ட இடம்எனக் குறித்துச் சொல்லக்கூடியதாய் அவர்கள் பெயரால் ஓர்சமாதியும், அவர்களுடைய திருஎலும்புகளும், அக்காலத்தில் பாவிக்கப்பட்ட வாள்போலும் பலசின்னங்களும் இவ்வருடம் யாத்திரிகர்களின்காட்சிக்குவைக்கப்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

பின்னர் வழமைபோலப் பாதகுலசாகியமக்களின் வருடாந்த கூட்டம் ஆரம்பமாகித் திருவிழாசம்பந்தமாயும், சாகியசம்பந்தமாயும் பலவிஷயங்கள் பேசப்பட்டு, வருங்காலத்தில் இத்திருநாள் ஆடிமாதத்தில்வரும் 2-ம்ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்படவேண்டும் என்னும் தீர்மானம் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டுத் திருநாள் இனிதே முடிவெய்தியது. இதனை அயராவிடாது தொடர்பாகக் கொண்டாட ஊக்கம்எடுத்துவரும் குரவர்கட்கும், பெரியார்கட்கும், கூடும்யாத்திரிகர்கட்கும் வேதசாட்சிகளின் இராசா தமது ஆசிமழைபொழிந்தருள்வாராக!

கண்டுகளித்தோன்.

## கிராமச்சங்கத் தெரிவு

### அச்சுவேலி

அச்சுவேலிக் கிராமச்சங்க அங்கத்தவர்கள்தெரிவு இம்முறை எவ்வருடங்களிலும்பார்க்க அதிவிமரிசையாக நடந்ததை எண்ணும்போது எம்பகுதியில் எவராவது சந்தோஷமடையாமல் இருக்கமுடியாது. 14 வட்டாரங்களிலும் 8 வட்டாரவாசிகள் போட்டியின்றியே அங்கத்தவர்களை அனுப்பி வைத்தார்கள். ஏனைய 6 வட்டாரங்கள் போட்டியிட்டே ஜெயவிருதேந்தின. அடுத்தபடியாக 9-7-51 திங்கட்கிழமை தலைவர்தெரிவு நடைபெற்றது. அதிலே பலவருடகாலம் அச்சுவேலி அமெரிக்கன்மிஷன் கலாசாலை ஆசிரியராயும், பின்னர் புத்தூர் ஆங்கிலகலாசாலை அதிபராயுமிருந்து தற்போது இளைப்பாறியிருப்பவரான திரு. எஸ். வீரசிங்கம் அவர்கள் தலைவராகவும், 14-7-51 சனிக்கிழமை நடைபெற்ற உபதலைவர் தெரிவிலே அநேக வருடகாலம்அச்சுவேலிக்கத்தோலிக்க பாடசாலைத் தலைமையாசிரியராய் இருந்தவரும், தற்போது கொட்டகப்புலக் கத்தோலிக்கபாடசாலைத் தலைமையாசிரியராய் இருப்பவருமான திரு. ஏ. ஆர். மனுவேற்பிள்ளை அவர்கள் உபதலைவராகவும் அங்கத்தவர்களின் போட்டியின்றி ஏகமனதாய்த் தெரிந்தெடுக்கப்பட்டனர். இவர்கள் வட்டார அங்கத்தவர் தெரிவிலும் போட்டியின்றித் தெரியப்பட்டிருந்தார்கள். இதுவரை இல்லாதவிதமாகத் தலைவர்கள் ஏகமனதாய்த் தெரியப்பெற்றமையானது பாராட்டத்தக்கதே.

—நிருபர்.

ஆசிரியர் M. V. ஆசீர்வாதம் அவர்களால் இயற்றப்பெற்ற

**"படிமுறைக் கணிதங்கள்"**

எம்மிடம் தொகையாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

| | | | |
|---|---|---|---|
| 5-ம் வகுப்புப் படிமுறைக்கணிதம் | ... | ... | ரூபா 1-80 |
| 4-ம் வகுப்புப் படிமுறைக்கணிதம் | ... | ... | ரூபா 1-60 |

(வியாபாரிகளுக்கும் ஆசிரியர்களுக்கும் விசேஷ கழிவுண்டு.)

M. வஸ்தியாம்பிள்ளை அன் சன்ஸ்,
பெரியதெரு, சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓர் வேண்டுகோள்

தூத்துக்குடித் தமிழ்இலக்கியக்கழகத்தார் மீண்டும் புதிய பதிப்புகள் வெளியிடும்பொருட்டு அடியிற்கண்ட நூல்களைத் தங்கட்குஅனுப்புமாறு அன்பர்களைக் கேட்டுக்கொள்ளுகின்றனர். வேறுஅரிய கத்தோலிக்கநூல்கள் எவையேனும் வைத்திருப்போர், அவற்றையும் அவர்கட்கு அனுப்பவும். தகுதிக்கு ஏற்றவண்ணம் அவற்றிற்கு விலைகொடுத்துப் பெறவும் ஆயத்தமாய் இருக்கின்றனர்.

1. வேதநாயகம்பிள்ளையவர்கள் நூல்கள் அனைத்தும்—சிறப்பாக,தேவமாதா அந்தாதி,திருவருள் அந்தாதி, திருவருள்மாலை, சத்தியவேத கீர்த்தனை, தேவதோத்திரமாலை, சித்தாந்த சங்கிரகம், பெரியநாயகி அம்மன் பதிகம், பொம்மைக்கலியாணம்.
2. திருக்காவலூர்க் கலம்பகம்—அருளப்பநாவலரவர்கள் உரை.
3. தேம்பாவணி—ஜெகராவ் முதலியார்பதிப்பு.
4. சவரிராயலு பாடல்கள்.
5. Tamilian Antiquary—பழம் பிரதிகள்.

முகவரி :- The Secretary,
Tamil Literature Society,
52, New Colony,
Tuticorin.

### சீனமூங்கில்திரை

"நான் இலங்கைக்குவந்தபோது இது சுவர்க்கலோகமென்று நினைத்தேன்; ஆனால், சீனாவைப்பற்றி ஒருவருக்குண்டாகும் மனப்பதிவோ முற்றிலுமே மாறானது; உண்மையான நிர்ப்பந்த வாழ்க்கை நிலைமையை நீங்கள்காண ஆசித்தால் சீனாவுக்குப் போங்கள்" என்று அங்கே 20 வருடம் பப்ரிஸ்ற் புரொட்டஸ்தாந்தசபை மிஷனரியாயிருந்து திரும்பியிருக்கின்ற கனம். ரி. டபிள்யு. அலென் அவர்கள் கொழும்பிலே சென்ற வியாழக்கிழமைநடந்த ரொட்டறிகிளப் விருந்தின் போது, "மூங்கிற்திரைக்குப் பின்னால் சீனா" எனும் விஷயமாகப் பேசியபோது கூறலாயினர். சீனக்கம்யூனிஸ்த அரசாங்கம் சகலமிஷன் பாடசாலைகளையும், அபகரித்துவிட்டது; ஐரோப்பியநாடுகளுடன் கொண்டுள்ள தொடர்புகளையெல்லாம் நீக்கிவிடவேண்டுமென்று அங்குள்ள கிறீஸ்தசபைகளுக்குக் கட்டளைபிறப்பித்துள்ளது. ஐரோப்பியர்கள் சீனாவிலிருந்து வெளியேற்றப்படுகிறார்கள்; "அதிகம் விரைவிலே" மூங்கில்திரை ஓர் இரும்புத்திரை ஆகலாமென்றும் அவர் கூறியிருக்கிறார்.

### நாய்ச்சண்டையும் கொலையும்

நக்குவானையைச்சேர்ந்த தால்வீன் தோட்டத்திலே சென்றசனிக்கிழமை இருநாய்கள் சண்டையிட்டன. அதன் விளைவாக ஒருநாயின் சொந்தக்காரனான மாரையா எனும் தொழிலாளி கொலையுண்டான். மாரையாவின் நாய் மற்றோர் தொழிலாளியான இராமையாவின் நாயுடன் சண்டையிட்டு அதைக் கடித்ததென்றும், அதனால் நாய்களின் சொந்தக்காரர் இருவருக்குமிடையே தகராறு ஏற்பட்டபோது மாரையா கத்திக்குத்துக்காயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படு முன்னரே மரணமடைந்தானென்றும் சொல்லப்படுகிறது.

### முசிறுகளைத் தடுக்கும் முயற்சி

வலிகாமம்மேற்கு, வலிகாமம்வடக்குக் காரியாதிகாரிகளின் பிரிவுகளிலே முசிறுகளாலே பயிர்களுக்கு ஏற்படும் அழிவைத் தடுத்துவைக்குமாறு கமத்தொழிற்பகுதி அதிகாரிகள் நடவடிக்கைஎடுத்து வருகின்றார்கள். கமத்தொழில் நடைபெறும் பகுதிகளை அடுத்து இந்தஎறும்புகள் மறுபடியும் தங்கள் கூடுகளைக் கட்டாமற்தடுத்து வைப்பதான 'கமெக்சேன்' எனும் பொடியைத் தூவுவதே அவர்கள் எடுத்துவரும் நடவடிக்கையாகும்.

## "தோல்வியடைந்த..."

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

தக்க நிலைமையில் அவன் அகப்பட்டாதிருக்கவுமேயாகும்."

அந்தப்புத்தகத்திலே இவர்கள் ரூஷியாவில்பார்த்தவைகளையும் விபரிக்கின்றார்கள். தொழிலாளிகள்வருந்தி அன்றாடு உணவுசம்பாதிக்க, கட்சியின் மேற்படியிலுள்ள அங்கத்தினர்கள் சகலசுக சந்தோஷங்களோடும் வாழ்கின்றனர். ஜீது தங்கியிருந்த அழகானவீட்டுக்கருகில் தொழிலாளிகள் தங்கும் ஆறு சதுர அடிமட்டுமே விஸ்தாரமுள்ள ஏராளமான சிற்றறைகளைப்பார்க்கலாம். கட்டாய சேவையும், சிறைவாசமுமே தொழிலாளிகளின் சாதாரண அனுபவங்கள். ஜீதுசொல்லுகிறார்: "ஓர்நண்பனுயினும் சைபீரியாவில் துன்புற்று மாண்டதையோ, கொல்லப்பட்டதையோ, திடீரென்று மறைந்துவிட்டதையோ அறியாதவர்கள் எங்களில் யாருமில்லை. சனநாயக ஆட்சியில் நீதிநடைமுறையில் இதில்காணுங்குறைகளை ஆவேசத்தோடு ஆட்சேபித்துப் பழக்கமுள்ள எங்களுக்குக் கம்யூனிஸ்தரூஷியாவில் கேள்விமுறையின்றி நண்பர்கள்கொல்லப்படுவதைப் பார்த்தும், மவுனம்சாதிக்கவேண்டியதாய் இருந்தது."

சுதந்தர வாஞ்சையுள்ள இவர்கள் ஆறுபேரும் கடைசியிலே கம்யூனிஸ்தகட்சியைவிட்டு விலகிக்கொண்டனர். சமூகநீதியைக் கம்யூனிஸ்தரில் காணமுடியாதெென உணர்ந்துகொண்டனர். அதற்குமாறாக, சரீரத்தையும், மனதையும் அடிமைப்படுத்தும் கொடூர ஏற்றத்தாழ்வையே கண்டனர். கம்யூனிஸத்தில் தனிப்பட்டவர்களுக்கு மதிப்பில்லை. இடமில்லை. பொதுநன்மைக்கெனச்சொல்லி ஆயிரக்கணக்கானமக்களைக் கூட்டங்கூட்டமாகக் கொலைசெய்வதற்கும் கம்யூனிஸ்தர்கள் பின்வாங்குவதில்லை.

"கடவுள்உதவியின்றி மனிதன் வாழமுடியாது, அல்லது கடவுளுக்குப்பதிலாக மனிதனுக்கு வெற்றிமார்க்கங்காட்ட ஓர்தூண்டுதல் இருத்தல்வேண்டும்" என்று ஏற்கனவே சொல்லியிருந்தார் ஜீது. கடவுளுக்குப்பதிலாக உண்மையான சுதந்தரமும், சமூகநீதியும் வழங்கிக்கொண்டு கம்யூனிஸம் ஜெயமாலை சூடுமென்றுதான் ஜீதும், நண்பர்களும் எதார்த்தமாக நம்பியிருந்தார்கள். ஆனால், அது முடியாதென்பது வெகு சீக்கிரம் புலனாயிற்று. சமூகநீதியின்மைக்குத் தக்கபரிகாரம் காட்டுமென்று கருதப்பட்ட கம்யூனிஸமென்கிறகடவள் தோல்வியடைந்ததினாலே அவர்கள் தங்கள் கட்டுரைகளுக்குத் தலையங்கமாகத் "தோல்வியடைந்த கடவுள்"என்று சூட்டினார்களெனச் சொல்லவும் வேண்டுமா?




எப்பொழுதும் உங்கள் தேநீர், கோப்பி, கொக்கோ, பானங்களுடன் நோனு மார்க் பாலைக் கலந்து சாப்பிடுவதினிமித்தம், நீங்கள் உபயோகிக்கும்பால் உத்தரவாதமுள்ள சுத்தமும், முழுச்சத்தும், மற்றும்முதல்தரமானபசுப்பாலில் அடங்கியுள்ள எல்லா போஷாக்கு சத்துகளும்அடங்கியுள்ளது என்பதாக உறுதிகொள்ளுங்கள்,

### வரவுசெலவுத்திட்ட விவாதம்

புதியஅரசிறைவருடத்தின் வரவுசெலவுத்திட்ட விவாதம் சென்ற 17-ந்திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமானபோது, அரசாங்க கட்சியைச் சேர்ந்தவர்களாய் 55 பேரும், எதிர்க்கட்சிகளைச்சேர்ந்தவர்களாய்45பேரும் இருந்தார்கள். அரசாங்ககட்சிகளிலே ஐக்கியதேசீயக்கட்சி 39 பேரையும் தமிழ்க்காங்கிரஸ் 4 பேரையும், நியமனஅங்கத்தவர்கள் 6 பேரையும், தொழிற்கட்சி 2 பேரையும், சுயேச்சைஅங்கத்தினர் 4 பேரையும் கொண்டிருந்தன. எதிர்க்கட்சிகளிலே நவலங்கா சமசமாஜக்கட்சி 14 பேரையும், இலங்கை–இந்திய காங்கிரஸ் 7 பேரையும், திரு. பண்டாரநாயகவின் கோஷ்டி 6 பேரையும், கம்யூனிஸ்த கட்சி 3 பேரையும், மகாஜன பெகமுன 2 பேரையும், லங்காசமசமாஜக் கட்சி (புரட்சி) 2 பேரையும், சுயேச்சைஅங்கத்தினர் 9 பேரையும், தமிழரசுக்கட்சி 2 பேரையும் கொண்டிருந்தன. இதுவரை ஐக்கியதேசீய கட்சியிலிருந்து திரு. பண்டாரநாயக உட்பட 6 பேர் எதிர்க்கட்சிப்பக்கம் சேர்ந்திருக்கின்றார்கள்.

### ஓர் அதிசய நாய்

கொழும்பிலே என். சி. சி. மைதானத்தில் நாளை 27-ந்திகதி ஆரம்பமாகவிருக்கும் ஆவணிக் களியாட்டவிழாவிலே புளூட்ரோ என்ற ஓர் அதிசய நாயும் காண்பிக்கப்படவிருக்கிறது. இது ஊதுகுழல் ஊதுகிறது. ஐந்தும் இரண்டும்ஏழு என்று எண்களைக்கூட்டுகிறது. எண்களைக் கழிக்கிறது. பேசுகிறது. முன்னங்கால்களிலும் பின்னங்கால்களிலும் நடக்கிறது. இந்த நாய் ஓர்நாள் ஓர் குட்டியாய்க் கல்கத்தாநகர் வீதியிலே அலட்சியமாகவிடப்பட்டுத் தனது உடலிலிருந்து இரத்தம் பெருகியபடி காயங்களுடன் செல்லக் காணப்பட்டபோது, ஸ்ரீமதி எம். சந்தரெஸ் எனும் மாது இதனைத் தூக்கியெடுத்து அதன் முறிந்தகாலை ஒட்டவைத்துக் காயங்களைக் குணமாக்கினர். நாய்களைச் சேர்க்கஸ் விளையாட்டுக்குப் பயிற்றுவதில் அனுபவமுள்ள இந்த மாது அதன் விவேகசாதுரியத்தை அவதானித்து அதனைப்பயிற்றி எடுத்தனர். இது மம்மா என்றும சொல்லப்பழகியிருக்கிறது.

* * *

### கெய்ஸரின் குமாரன்

ஜேர்மனியின் மாஜி சக்கிரவர்த்தியாயிருந்து காலஞ்சென்ற இரண்டாவது கெய்ஸர் வில்ஹெல்மினின் பட்டத்துக் குமாரனான வில்ஹெல்ம் இளவரசர் தனது 69-ம் வயசிலே சென்றவெள்ளியன்று வூட்ரெம்பேர்க் நாட்டைச் சேர்ந்த ஹெசிஜென்நகரில் காலஞ்சென்றாரெனச் செய்திகிடைத்திருக்கிறது. இவர் அரசியற்பரிபாலனத்திலும், பட்டாளத்திலும் சிறந்தபயிற்சி அடைந்தபின் 1917-ம்ஆண்டு நவமாக வகுக்கப்பட்ட ஜேர்மன் படைவகுப்பு ஒன்றின் பிரதம சேனாபதியாயினர். முதலாவது உலகயுத்தத்தில் ஜேர்மனி தோல்வியுற்று 1918-ம் ஆண்டு சரணாகதியடைந்தபோது, தேசாந்திரியான தனது தந்தையாகிய சக்கிரவர்த்தியை இவரும் பின்தொடர்ந்தார். பின்னர் 1923-ம் ஆண்டு இவர் ஜேர்மனிக்குத் திரும்பிவர அனுமதிக்கப்பட்டு 1932-ம் ஆண்டு சித்திரைவரையில் அரசியற்கருமங்களில் தலையிடாது அமைதியாயிருந்தபின் தான் ஹிற்லருக்குச் சார்பானவரெனப் பிரசித்தமாக அறிக்கையிட்டு, நாஸிகள் அதிகாரத்துக்கு வந்ததும் அந்தநாசக் கட்சியில் சேர்ந்து கொண்டார். இவருக்கு ஆறுபிள்ளைகள் இருக்கிறார்கள்.

* * *

—பிரித்தானி தற்போது அதிகபலம் பொருந்திய எஞ்சினைக்கொண்டதும், மிகவேகமுடையதுமான ஜெற் பிரயாணவிமானம் ஒன்றைக் கட்டிவருகிறது. இது லண்டனிலிருந்து புறப்பட்டு அத்திலாந்திக் சமுத்திரத்துக்கு மேலாகப்பறந்து ஏழுமணித்தியாலத்திலே நியூயோர்க்நகர்போய்ச் சேரக்கூடியதாம்.

Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residing at 39, Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, July 26 1951.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org